Adda247 தமிழ்

ஜூன் மாத பதிப்பு

# வெற்றி ADDA247 தமிழ்நாடு மாதாந்திர நடப்பு நிகழ்வுகள் தமிழில் 2022 PDF

**TNPSC Group 1, TNPSC Group 2/2A, TNPSC Group 3 & 4, TNUSRB, TNFUSRC, IBPS, SSC, IBPS RRB, SBI, RRB மேலும் பல**



இந்தியாவிலேயே அதிக கோயில்கள் கொண்ட மாநிலங்களில் தமிழ் நாடு முதலிடம்-மும்பை ஐஐடி ஆய்வில் தகவல்

ராஜ்ய சபா தேர்தல் - 11 மாநிலங்களை சேர்ந்த 41 பேர் போட்டியின்றி தேர்வு

நிதி ஆயோக் தலைவராக பரமேஸ்வரன் ஐயர் நியமனம்

2022 ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி விருது அறிவிக்கப்பட்டுள்ளது

தமிழகத்தில் 8,023 பேருக்கு 4 ஆவது நிலை யானைக்கால் நோய் பாதிப்பு

- adda 247 app ல் தமிழ்நாடு மாநில தேர்வு
- பிரிவில் பயின்றிருங்கள்
- கிளிக் செய்க
- தேர்ந்திடு வென்றிடு

Tamilnadu Monthly Current Affairs PDF in Tamil | June 2022

**இந்தியாவி அதிக கோயில்கள் கொண்ட மாநிலங்களில் தமிழ் நாடு முதலிடம் - மும்பை ஐஐடி ஆய்வில் தகவல்:**

- நாட்டில் உள்ள கோயில்கள் குறித்து மும்பை ஐஐடி மாணவர்கள் ஆய்வு ஒன்றை நடத்தினர். இதில் தமிழகத்தில் அதிகமாக 79,154 கோயில்கள் இருப்பதாக கூறப்பட்டுள்ளது.
- இதற்கு அடுத்தப்படியாக மகாராஷ்டிராவில் 77,283 கோயில்களும், கர்நாடகாவில் 61,232 கோயில்களும், மேற்கு வங்கத்தில் 53,658 கோயில்களும், குஜராத்தில் 49,995 கோயில்களும் உள்ளதாகவும் அந்த ஆய்வு கூறுகிறது.
- தமிழகத்தில் 1 லட்சம் பேருக்கு 103 கோயில்களும், மகாராஷ்டிராவில் 1 லட்சம் பேருக்கு 62 கோயில்களும் உள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.




**தேசிய அளவில் கல்வி அமைச்சர்களுக்கான மாநாடு - தமிழக அரசு புறக்கணிப்பு:**

- குஜராத்தில், மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் தலைமையில், தேசிய அளவில் கல்வி அமைச்சர்களுக்கான இரண்டு நாள் மாநாடு புதன் (ஜூன் 1) மற்றும் வியாழக்கிழமைகளில் (ஜூன் 2) நடைபெறுகிறது.
- இந்த மாநாட்டில் பங்கேற்க தமிழ்நாடு உட்பட இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களின் கல்வி அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு மத்திய அரசு சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.
- குஜராத்தில் நடைபெறும் இந்த கல்வி அமைச்சர்கள் மாநாட்டில், புதிய தேசிய கல்விக் கொள்கை, பள்ளி கட்டமைப்புகள் மேம்பாடு போன்ற விஷயங்கள் குறித்து விவாதிக்கப்படுகிறது.
- மேலும், மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான், புதிய கல்விக் கொள்கையை அமல்படுத்துவது குறித்து இந்த மாநாட்டில் பங்கேற்றுள்ள கல்வி அமைச்சர்களுடன் கலந்தாலோசிக்கிறார்.
- இந்தநிலையில், முதல் நாள் மாநாடு நடைபெற்ற நிலையில், இந்த மாநாட்டை தமிழக அரசு புறக்கணித்துள்ளது.

- தமிழகத்தில் இருந்து யாரும் இந்த மாநாட்டில் பங்கேற்கவில்லை. தமிழக உயர் கல்வித் துறை அமைச்சர் பொன் முடி மற்றும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யா மொழி இருவரும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை.
- மேலும் தமிழக அரசு சார்பில் கல்வித் துறை செயலாளர்கள் யாரும் மாநாட்டில் கலந்துக்கொள்ளவில்லை.

**ஏற்றுமதி - மூன்றாம் இடத்தில் தமிழகம்:**

- இந்தியாவில் இருந்து வெளி நாடுகளுக்கு 2021 - 22 ம் நிதியாண்டில் 31.46 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 2.62 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் தமிழகத்தில் இருந்து ஏற்றுமதியானவை.
- நாட்டின் மொத்த ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்கு 8.34 சதவீதமாக உயர்ந்து மூன்றாவது இடத்தில் உள்ளது. இது 2020 - 21 ம் நிதியாண்டில் 1.93 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது.
- 2019 - 20 ம் நிதியாண்டில் தமிழக ஏற்றுமதியின் மதிப்பு 2.12 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது.
- 2021 - 22 ம் நிதியாண்டில் 9.45 லட்சம் கோடி ரூபாய் மதிப்புடன் குஜராத் மாநிலம் முதல் இடத்திலும் 5.45 லட்சம் கோடி ரூபாய் மதிப்பில் மகராஷ்டிரா மாநிலம் இரண்டாவது இடத்திலும் உள்ளன.

**கலைஞர் எழுது கோல் விருது 2022:**

- 2021 - 22 ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத் துறை மானியக் கோரிக்கையில் இதழியல் துறையில் சிறந்த இதழியலாளருக்கு ஆண்டு தோறும் கலைஞர் எழுது கோல் விருதும் ரூ.5 லட்சம் பரிசுத் தொகையுடன் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகிறது.
- ஜூன் 3 ஆம் தேதி கருணா நிதியின் பிறந்த நாளை முன்னிட்டு, கலைஞர் விருதுக்கான தேர்வுக் குழுவின் பரிந்துரையின் படி 2021 ஆம் ஆண்டிற்கான விருதாளரான மூத்த பத்திரிக்கையாளர் சண்முக நாதன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

**கலைஞர் நினைவு கலைத் துறை வித்தகர் விருது 2022:**

- தமிழ்த் திரை உலகில் சிறந்து விளங்கிய வாழ் நாள் சாதனையாளர்களுக்கு முத்தமிழ் அறிஞர் கலைஞர் பெயரில் 'கலைஞர் நினைவு கலைத் துறை வித்தகர் விருது' வழங்கப்படும் என தமிக அரசு அறிவித்து இருந்தது.
- இந்த விருது தமிழ் நாடு அரசு சார்பில் ஒவ்வொரு ஆண்டும், கலைஞர் பிறந்த தினமான ஜூன் 3 ஆம் தேதி அன்று வழங்கப்படும் அறிவிக்கப்பட்டு உள்ளது.

- அதன் படி 2022 - ஆம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத் துறை வித்தகர் விருதிற்காக பல்வேறு திரைப்படங்களுக்கு வசனங்கள் எழுதி புகழ் பெற்ற வசன கர்த்தா ஆரூர் தாஸ் (வயது 90) தேர்வு செய்யப்பட்டு இருப்பதாக தமிழக அரசு அறிவித்து இருக்கிறது.

**தமிழ் நாடு மாநில கல்விக் கொள்கை உருவாக்க குழு - அரசாணை வெளியீடு:**

- மத்திய அரசு தேசிய கல்விக் கொள்கையை கொண்டு வந்துள்ள நிலையில் அதில் உள்ள பல திட்டங்களை ஏற்க முடியாது என தமிழ அரசும் தொடர்ந்து வாதிட்டு வருகிறது.
- இந்நிலையில் சில நாட்கள் முன்னதாக தமிழ் நாட்டில் கல்வியை மேம்படுத்தும் வகையில் புதிய கல்விக் கொள்கை உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.
- அதன் படி தற்போது அதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன் படி, மாநில கல்விக் கொள்கைகளை உருவாக்க 13 பேர் கொண்டு குழு அமைக்கப்படுகிறது.
- நீதியரசர் முருகேசன் தலைமையிலான இந்த 13 பேர் கொண்ட குழு ஒரு ஆண்டுக்குள் அறிக்கை சமர்பிக்க வேண்டும்.
- இந்த குழுவில் மெட்ரிக் பள்ளிகள் இயக்குனரும் நியமிக்கப்பட்டுள்ளார். உலகளாவிய கல்வி, இளம் பருவத்தினருக்கான கல்வி ஆகியவற்றை கருத்தில் கொண்டு அறிக்கை தயாரிக்கும் படி உத்தரவிடப்பட்டுள்ளது.

**ராஜ்ய சபா தேர்தல் - 11 மாநிலங்களை சேர்ந்த 41 பேர் போட்டியின்றி தேர்வு:**

- நாடு முழுவதும் 15 மாநிலங்களிலிருந்து இருந்து காலியாகும் 57 ராஜ்ய சபா எம்பி பதவிகளுக்கான தேர்தல் வரும் 10 ஆம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
- அந்த வகையில் உத்தரப் பிரதேசத்திலிருந்து 11 பேரும் தமிழகத்தை சேர்ந்த 6 பேரும் பீகாரில் இருந்து 5 பேரும், ஆந்திராவிலிருந்து 4 பேரும், மத்திய பிரதேசம், ஒடிஸா ஆகிய மாநிலங்களிலிருந்து தலா 3 பேரும், சத்தீஸ்கர், பஞ்சாப், தெலுங்கானா, ஜார்க்கண்ட் மாநிலங்களிலிருந்து தலா 2 பேரும் உத்தரகண்ட் மாநிலத்திலிருந்து ஒருவரும் போட்டியிடுவதாக வேட்பு மனு தாக்கல் செய்திருந்தனர்.
- இவர்களை எதிர்த்து வேறு யாரும் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்யாததால் இவர்கள் 11 பேரும் போட்டியின்றி வென்றதாக அறிவிக்கப்பட்டுள்ளார்கள்.

- அவர்களில் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த ப. சிதம்பரம், ராஜீவ் சுக்லா, பாஜகவை சேர்ந்த சுமித்ரா வால்மீகி, கவிதா படிதர், முன்னாள் காங்கிரஸ் தலைவர் கபில் சிபல், ராஷ்ட்ரீய ஜனதா தளம் கட்சியின் மிசா பாரதி, ஜெயந்த் சவுத்ரி உள்ளிட்டோரும் ராஜ்ய சபாவுக்கு போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டனர்.
- தமிழகத்தில் காலியாகும் ஆறு இடங்களையும் சேர்த்து மொத்தம் 57 இடங்களுக்கு வரும் 10 - ஆம் தேதி தேர்தல் அறிவிக்கப்பட்டது.
- அதன் படி திமுக சார்பில் கிரி ராஜன், கல்யாண சுந்தரம், ராஜேஸ் குமார் ஆகியோர் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டனர்.
- அதிமுக சார்பில் முன்னாள் அமைச்சர் சி.வி. சண்முகம் மற்றும் தர்மர் ஆகியோரும், காங்கிரஸ் சார்பில் முன்னாள் மத்திய நிதியமைச்சர் ப. சிதம்பரமும் வேட்பு மனு தாக்கல் செய்தார்.




- அதே நேரத்தில் திமுக, அதிமுக, காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்கள் ஆறு பேர் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டதாக தேர்தல் நடத்தும் அதிகாரி சீனிவாசன் அறிவித்தார்.

**உயர் நீதிமன்ற நிரந்தர நீதிபதிகளாக 9 பேர் பதவியேற்பு:**

- 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மாவட்ட நீதிபதிகளாக பணியாற்றி வந்த சந்திர சேகரன், சிவ ஞானம், இளங்கோவன், ஆனந்தி, கண்ணம்மாள், சத்திக் குமார், சுகுமார குரூப், முரளி சங்கர், மஞ்சுளா, தமிழ் செல்வி ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் கூடுதல் நீதிபதிகள் நியமிக்கப்பட்டனர்.

**உயர் நீதிமன்றத்துக்கு 2 புதிய நீதிபதிகள் நியமனம் - குடியரசுத் தலைவர் ஒப்புதல்:**

- முதல் கட்டமாக என். மாலா, எஸ். சவுந்தர் ஆகியோர் ஏற்கெனவே நீதிபதிகளாக நியமிக்கப்பட்டு, பணியாற்றி வருகின்றனர்.
- இந்நிலையில் வழக்கறிஞர்களாகப் பணியாற்றி வரும் சுந்தர் மோகன் மற்றும் கே. குமரேஷ் பாபு ஆகியோரை தற்போது சென்னை உயர் நீதிமன்றத்தின் புதிய கூடுதல் நீதிபதிகளாக நியமித்து, குடியரசுத் தலைவர் ராம் நாத் கோவிந்த் உத்தரவிட்டுள்ளார். இவர்களுக்கு விரைவில் தலைமை நீதிபதி பதவிப் பிரமாணம் செய்து வைப்பார்.

- இதன் மூலம் சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிபதிகளின் எண்ணிக்கை 58 -ஆக உயர்ந்துள்ளது. மொத்த நீதிபதி பணியிடங்களின் எண்ணிக்கை 75 என்ற நிலையில், காலியிடங்களின் எண்ணிக்கை 17 -ஆக உள்ளது.

**நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம் - முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்:**

- சென்னை மாநகராட்சி ராய புரம் மண்டலம் தங்க சாலை மேம்பாலப் பூங்கா அருகில் 'நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம்' என்ற தீவிர தூய்மைப் பணி திட்டத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.
- அதைத் தொடர்ந்து முதல்வர் தலைமையில் மாணவ, மாணவிகள், மாநகராட்சிப் பணியாளர்கள் மற்றும் பொது மக்கள், நகரங்களின் தூய்மை குறித்த உறுதி மொழி ஏற்றனர்.
- இதையடுத்து, பசுமையான சுற்றுச் சூழலை ஏற்படுத்தும் வகையில் தங்க சாலை மேம்பாலத்தின்கீழ் உள்ள இடத்தில் மரக் கன்றுகளை நட்டு, நகர்ப் புற அடர் வனம் அமைக்கும் பணியை முதல்வர் தொடங்கி வைத்தார்.
- சென்னையில் முதல்வர் தொடங்கி வைத்த அதே நேரத்தில், தமிழகம் முழுவதும் பொது மக்கள் அதிகம் கூடும் பகுதிகளில், தீவிர தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**'இ - சஞ்சீவனி', மத்திய அரசின் இலவச தொலை மருத்துவ சேவை, தேசிய சுகாதார ஆணையத்தின் ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது:**

- இ - சஞ்சீவனி திட்டத்தை, ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கத்துடன் வெற்றிகரமாக ஒருங்கிணைத்துள்ளதாக தேசிய சுகாதார ஆணையம் அறிவித்துள்ளது.
- இந்த ஒருங்கிணைப்பு, மத்திய சுகாதார அமைச்சகத்தின் தொலை மருத்துவ சேவையான இ - சஞ்சீவனியை தற்போது பயன்படுத்தி வருவோர், ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்கை எளிதில் உருவாக்கி அதனை பயன்படுத்தவும், ஏற்கனவே பெறப்பட்ட சிகிச்சைக்கான பரிந்துரைகள், பரிசோதனை விவரங்களை தொடர்ந்து பராமரிக்க வகை செய்கிறது.
- பயனாளர்கள் தங்களது சுகாதார ஆவணங்களை இ - சஞ்சீவனி திட்ட மருத்துவர்களுடன் பகிர்ந்து கொள்ள முடிவதால், மருத்துவ ஆலோசனைகள் மற்றும் தொடர் சிகிச்சை கிடைப்பதையும் உறுதி செய்கிறது.

**சுற்றுச் சூழல் பாதுகாப்பில் சிறப்பாக செயல்பட்ட ஆட்சியர், பள்ளிகளுக்கு பசுமை விருது - முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்:**

- உலக சுற்றுச் சூழல் தினம் ஜூன் 5 - ம் தேதி கொண்டாடப்படுகிறது. இதையொட்டி, சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு சிறப்பான பங்களிப்பு வழங்கியமைக்காக மாவட்ட ஆட்சியர்கள் டாக்டர் எஸ். அனீஷ் சேகர் (மதுரை), த. மோகன் (விழுப்புரம்), பா. முருகேஷ் (திருவண்ணாமலை) ஆகியோருக்கு 2021 - ம் ஆண்டுக்கான பசுமை விருதுகளையும் முதல்வர் வழங்கினார்.
- மாசு தடுப்பு மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பில் சிறப்பாகச் செயலாற்றி, விருதுக்குத் தேர்வான 79 அமைப்புகளில், ராணிப் பேட்டை டேனரி எஃப்ளுயன்ட் ட்ரீட்மென்ட் நிறுவனம், பெருந்துறை அரசு ஆண்கள் மேல் நிலைப் பள்ளி, திருப்பூர் சுலோச்சனா காட்டன் ஸ்பின்னிங் மில்ஸ் நிறுவனம், நீலகிரி மாவட்டத்தில் உள்ள க்ளீன் குன்னூர்' அமைப்பு, போரூர் அரசு மகளிர் மேல் நிலைப் பள்ளி ஆகியவற்றுக்கு 2021 - ம் ஆண்டுக்கான பசுமை முதன்மையாளர் விருதுடன், ரூ.1 லட்சத்துக்கான காசோலையையும் முதல்வர் வழங்கினார்.

**தேசிய நெடுஞ்சாலைகளில் அதிக விபத்து! முதலிடத்தில் தமிழ் நாடு:**

- மத்திய போக்குவரத்துத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களில் இந்தியாவில் கடந்த 2020 ஆம் ஆண்டு தேசிய நெடுஞ்சாலைகளில் விபத்து நிகழ்ந்த முதல் 10 மாநிலங்களில் தமிழ் நாடு முதலிடத்தில் உள்ளது தெரிய வந்துள்ளது.
- அதே நேரம், முந்தைய 2019 ஆம் ஆண்டு நிகழ்ந்த விபத்துகளை விட 2020 ஆம் ஆண்டில் தமிழகத்தில் விபத்துகள் குறைந்துள்ளன.
- 2019 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் 17,633 விபத்துகள் நிகழ்ந்த நிலையில், 2020 ஆம் ஆண்டில் அது 15,269 ஆக குறைந்துள்ளது.
- அதே போல, விபத்துகளால் ஏற்பட்ட உயிரிழப்புகளும் 2019 ஆம் ஆண்டை விட 2020 ஆம் ஆண்டு குறைந்திருக்கின்றன.
- வாகனங்களில் பழுது, பழைய வாகனங்களை இயக்குவது, வாகனங்களில் அதிக சுமையை ஏற்றிச் செல்வது, ஓட்டுநரின் அஜாக்கிரதை போன்றவையே விபத்துக்கள் நிகழ காரணமாக கூறப்படுகின்றன.

- அதே நேரம், மத்திய அமைச்சகத்தின் புள்ளி விவரங்கள் படி, 2020 ஆம் ஆண்டு நிகழ்ந்த 1,19,693 விபத்துக்களில், 41,537 வாகனங்கள் 5 ஆண்டுகளுக்கும் குறைவான வாகனங்கள் தான் அதிக விபத்துகளுக்கு ஆளானதாக மத்திய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**மாற்றுத் திறனாளிகள் 4% இட ஒதுக்கீடு - உயர் மட்டக் குழு நியமனம்:**

- மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு வேலை வாய்ப்பில் 4% இட ஒதுக்கீட்டினை வழங்க ஏதுவாக உகந்த பதவியிடங்கள் கண்டறியப்பட்டு பணி நியமனம் செய்வதை கண்காணிக்கும் பொருட்டு உயர் மட்டக் குழு அமைக்கப்படும் என சட்ட மன்றத்தில் முதலமைச்சர் ஸ்டாலின் அறிவித்திருந்தார்.
- அதனடிப்படையில் மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு வேலை வாய்ப்புகளில் நடைமுறையில் உள்ள 4% இட ஒதுக்கீட்டின் அடிப்படையில், வேலை வாய்ப்பு வழங்குவதை உறுதி செய்திடும் வகையில் உயர் மட்டக் குழுவை அமைத்து தமிழ் நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.
- மாற்றுத் திறனாளிகள் துறை செயலாளர் தலைவராகவும், தொழிலாளர் நலத் துறை, மனித வள மேலாண்மைத் துறை செயலாளர்கள் உள்ளிட்ட 9 பேர் கொண்டு குழு அமைக்கப்பட்டுள்ளது.

**வேளாண் விளை பொருளுக்கான குறைந்த பட்ச ஆதரவு விலை உயர்வு:**

- ஆண்டு தோறும் காரிப் பருவத்துக்கான விதைப்புப் பணி தொடங்கும் போது, விளை பொருட்களுக்கான குறைந்த பட்ச ஆதரவு விலை உயர்வு குறித்த அறிவிப்பை வெளியிடுவது விவசாயிகளுக்கு ஊக்கமளிப்பதாக இருக்கும். அதனடிப்படையில் விவசாயிகளின் விளை பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கும்.
- அந்த வகையில், நடப்பு 2022 - 23 காரிப் பருவ காலத்தில் பயிரிடப்படும் 14 வகை வேளாண் விளை பொருட்களுக்கான குறைந்த பட்ச ஆதரவு விலையை உயர்த்த பிரதமர் மோடி தலைமையிலான பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை குழு ஒப்புதல் அளித்துள்ளது' என்றார்.
- இதன் படி, ஒரு குவின்ட்டால் நெல்லுக்கான (பொது) எம்எஸ்பி ரூ. 1,940 - லிருந்து ரூ. 2,040 ஆகவும் கிரேடு ஏ நெல்லுக்கான எம் எஸ்பி ரூ. 1,960 - லிருந்து ரூ. 2,060 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

- ராகி குவின்ட்டால் விலை ரூ. 3,377 - லிருந்து ரூ. 3,578 ஆகவும், சோளம் ரூ. 1,870 லிருந்து ரூ. 1,962 ஆகவும், துவரை ரூ. 6,300 - லிருந்து ரூ. 6,600 ஆகவும், உளுந்து ரூ. 6,300 -லிருந்து ரூ. 6,600 ஆகவும், வேர்க்கடலை ரூ. 5,550 - லிருந்து ரூ. 5,850 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.
- கம்பு குவின்ட்டால் விலை ரூ. 2,250 - லிருந்து ரூ. 2,350 ஆகவும், பாசி பயறு ரூ. 7,275 -லிருந்து ரூ. 7,755 ஆகவும் சூரியகாந்தி விதை ரூ. 6,015 - லிருந்து ரூ. 6,400 ஆகவும் சோயாபீன் ரூ. 3,950 - லிருந்து ரூ. 4,300 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

**சூரிய சக்தி மின்சாரத்தை உற்பத்தி செய்து தேசிய அளவில் தமிழகம் 4 - வது இடம்:**

- மத்திய மின் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையின் படி, 12,000 மெகா வாட் சூரிய சக்தி மின்சாரத்தை உற்பத்தி செய்து ராஜஸ்தான் மாநிலம் முதலிடத்திலும், 7,970 மெகா வாட் சூரிய சக்தி மின்சாரத்தை உற்பத்தி செய்து கர்நாடகா இரண்டாவது இடத்திலும், 7,180 மெகா வாட் சூரிய சக்தி மின்சாரத்தை உற்பத்தி செய்து குஜராத் மூன்றாவது இடத்திலும், 5067 மெகா வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்து தமிழகம் 4 - வது இடத்தில் உள்ளதாக மின் வாரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**உயர் நீதிமன்ற வரலாற்றில் முதன் முறையாக நீதிபதிக்கு உதவியாளராக பெண் தபேதார் நியமனம்:**

- சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிபதிகளின் உதவியாளர்களாக தபேதார்கள் என்று அழைக்கப்படக் கூடியவர்கள் நியமிக்கப்படுவது வழக்கம்.
- சிகப்பு தலைப் பாகை, கையில் செங்கோல் வெள்ளை உடை அணிந்து இவர்கள் நீதிமன்றங்களில் பணியாற்றுவார்கள்.
- இந்த நிலையில் சென்னை உயர் நீதிமன்ற வரலாற்றில் முதன் முறையாக பெண் ஒருவர் தபேதாரராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியாக உள்ள மஞ்சுளாவக்கு உதவியாக இலானி என்ற பெண் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.



**இந்திய யுகே டு கெதர் நிகழ்ச்சியின் தூதராக ஏ. ஆர். ரஹ்மான் நியமனம்:**

- பிரிட்டிஷ் தூதரகம் நடத்தும் இந்திய யுகே டு கெதர் என்ற கலாச்சார நிகழ்ச்சியின் (India UK Together Season of Culture) தூதராக இசையமைப்பாளரும் ஆஸ்கர் நாயகனுமான ஏ. ஆர். ரஹ்மான் நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்தியா சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் நிறைவடைந்ததை ஒட்டி கலாச்சார நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளது பிரிட்டிஷ் தூதரகம்.

**12,525 கிராமப் பஞ்சாயத்துகளில் பாரத் நெட் திட்டம் தொடங்கி வைத்தார் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்:**

- தமிழ் நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் (9.6.2022) தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில் நுட்பவியல் துறை சார்பில் தமிழ் நாட்டில் ரூ. 1,627.83 கோடி மதிப்பீட்டிலான பாரத் நெட் திட்டத்தை செயல்படுத்தும் விதமாக, தமிழ் நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனத்தின் வாயிலாக (TANFINET) கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை ஊராட்சி ஒன்றியம், முத்தல குறிச்சி கிராமப் பஞ்சாயத்தில் கண்ணாடி இழை கம்பி வடம் பதிக்கும் பணியினைத் தொடங்கி வைத்தார்.

**மாநிலங்களவைத் தேர்தல் 2022:**

- தமிழ் நாடு உள்பட 15 மாநிலங்களில் காலியாகும் 57 மாநிலங்களவை இடங்களுக்கு ஜூன் மாதம் 10 ஆம் தேதி தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்திருந்தது. ஏற்கனவே, தமிழகம் உள்பட 11 மாநிலங்களில் போட்டியின்றி 41 எம்பிக்கள் மாநிலங்களவைக்கு தேர்வாகி விட்டனர்.
- இந்நிலையில் இதில் கர்நாடகாவில் பாஜக சார்பில் போட்டியிட்ட மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதா ராமன் 46 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.
- மேலும், பாஜக சார்பில் நடிகர் ஜெக்கேஷ், லெஹர் சிங் ஆகியோரும் வெற்றி பெற்ற நிலையில், காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட முன்னாள் மத்திய அமைச்சர் ஜெய் ராம் ரமேஷ் வெற்றி பெற்றார்.
- அதே போல ராஜஸ்தானில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட பிரமோத் திவாரி, முகுல் வாஸ்னிக் மற்றும் ரந்தீப் சுர்ஜிவாலா ஆகியோரும், பாஜகவின் கன்ஷியாம் திவாரியும் வெற்றி பெற்றுள்ளனர்.
- விதிகளை மீறி சிலர் வாக்களித்ததாக எழுந்த புகாரையடுத்து மகாராஷ்டிரா மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்களில் வாக்கு எண்ணிக்கை நிறுத்தி வைக்கப்பட்டது.

- வாக்கு எண்ணிக்கை நடந்த நிலையில் மகாராஷ்டிராவில் மொத்தமுள்ள 6 இடங்களில் பாஜக 3 இடங்களிலும், காங்கிரஸ், சிவ சேனா, தேசிய வாத காங்கிரஸ் தலா 1 இடத்திலும் வெற்றி பெற்றன.
- பாஜகவின் பியூஷ் கோயல் 48 வாக்குகள் பெற்று வென்றார். சிவசேனாவின் சஞ்சய் பவார் தேர்தலில் தோல்வியடைந்தார். ஹரியானாவில் பாஜக ஒரு இடமும், பாஜக ஆதரவு சுயேச்சை ஒரு இடத்திலும் வெற்றி பெற்றது.

**வலையங்குளத்தில் 312 ஆண்டுக்கு முந்தைய கல்வெட்டு கண்டுபிடிப்பு:**

- வலையங்குளம் வரலாற்று ஆர்வலர் வேல் முருகன், தங்கள் ஊரில் பழமையான கல்வெட்டு இருப்பதாக தகவல் கொடுத்தார்.
- பெருங்குடி சரஸ்வதி நாராயணன் கல்லூரி வரலாற்று துறை உதவி பேராசிரியர் முனீஸ்வரன் தலைமையில் மாணவர்கள் அஜீத் குமார், தினேஷ் குமார், சூரிய பிரகாஷ், தர்மர் குழுவினர் அப்பகுதி கண்மாய்க்கரை அருகில் விநாயகர் கோயில் முன்பு 'திருமலை மெச்சினார்' என்ற பெயர் பறை சாற்றும் கல்வெட்டு இருப்பதை கண்டு பிடித்தனர். கல்வெட்டை படி எடுத்து பார்த்ததில் 312 ஆண்டுகளுக்கு முந்தியது என்பது தெரிந்தது.
- தமிழர்களின் தொன்மை கலைகளில் ஒன்று நாடகம். தொல்காப்பியம், சிலப்பதிகாரம் போன்ற நூல்களிலும் தமிழ் நாடகக் கலை பற்றிய சான்றுகள் உள்ளன.
- மதுரையை ஆண்ட நாயக்கர்கள் கி.பி., 1526 முதல் 1736 வரை நிர்வாகம், கலாசாரத்தில் சிறப்புடன் திகழ்ந்தனர்.
- வலையங்குளம் கண்மாய் அருகே ராணி மங்கம்மாள் சாலையின் ஓரமாக ஆல மரத்தடியில் 3 அடி நீளம், 2 அடி அகலம், பத்து வரிகள் கொண்ட தனி கருங்கல்லில் எழுத்துக்கள் பொறிக்கப் பட்டுள்ளது.
- இதில் 'சாலிய வாகன சகாப்தம் 1710 வருடம் 15, திங்கள் கிழமை பூரண நட்சத்திரமும் கூடிய சுப தினத்தில் வலையங்குளத்தில் இருக்கும் திருமலை மெச்சினார் பெருமை பெற்ற நாடக கலை சங்கமறிய விநாயகர் கோயிலுக்கு திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்து 'திருமலை மெச்சன் உபயம்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பச்சை நிற பாசி மணிகள் கீழடியில் கண்டெடுப்பு:**

- சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே கீழடியில் 8 - ம் கட்ட அகழாய்வு பணிகள் நடந்து வருகின்றன.
- கீழடி அகழாய்வில் புதிய இடத்தில் தோண்டப்படும் 7 குழிகளில் சிறிதும், பெரிதுமாக பாசி மணிகள், வட்ட சில்லுகள், சுடுமண் பானை ஓடுகள் கிடைத்து வருகின்றன.

- இதே போல் அகரத்தில் நடந்து வரும் அகழாய்வில் 4 குழிகள் தோண்டப்பட்டு வரும் நிலையில் 2 உறை கிணறுகள், பாசி மணிகள் கிடைத்து வருகின்றன.
- கொந்தகையில் 2 குழிகள் தோண்ட்டப்பட்ட நிலையில் ஒரே இடத்தில் 21 முது மக்கள் தாழிகள் கண்டறியப்பட்டுள்ளன.
- கீழடி அகழாய்வில் புதிய குழியில் பழங்கால பச்சை நிற பாசி மணிகள் சில கிடைத்துள்ளதாக அகழாய்வாளர்கள் தெரிவித்தனர்.

**ஆன்லைன் ரம்மி தொடர்பாக ஆய்வு செய்ய குழு - அரசாணை வெளியிட்டது தமிழக அரசு:**

- உயர் நீதி மன்ற தலைமை நீதிபதி அடங்கிய அமர்வு, கடந்த ஆகஸ்ட் 3 ம் தேதி வழங்கிய தீர்ப்பில், இச்சட்டத்தை ரத்து செய்தது.
- மேலும், அச்சட்டம் நிறைவேற்றப்படுவதற்கான அறிவியல் பூர்வ தரவுகளை விளக்க தவறியதாகவும் உயர் நீதிமன்றம் கருத்து தெரிவித்திருந்தது.
- இந்நிலையில், ஆன்லைன் ரம்மி விளையாட்டால் ஈர்க்கப்பட்டு, அதில் பணத்தை இழந்து உயிரை மாய்த்துக் கொள்ளும் துயரமான நிகழ்வுகள் தொடர்ச்சியாக நடந்து வருகின்றன.
- இது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான ஆலோசனைக் கூட்டம் சென்னை தலைமை செயலகத்தில் நடந்தது.
- தொடர்ந்து, சென்னை உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி கே. சந்துரு தலைமையில் குழு அமைத்து தமிழக அரசு உத்தரவிட்டது.
- இக்குழுவில், ஐஐடி தொழில் நுட்ப வல்லுநர் சங்கர ராமன், ஸ்நேஹா அமைப்பின் நிறுவனரும் உளவியலாளருமான லட்சுமி விஜய குமார், காவல் துறை கூடுதல் இயக்குனர் வினித் தேவ் வாங்கடே ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர்.
- ஆன்லைன் ரம்மி விளையாட்டால் ஏற்படும் நிதியிழப்பு மற்றும் தற்கொலை உள்ளிட்ட பெரும் ஆபத்தை விளைவிக்கும் தன்மையை கண்டறிவது, இந்த விளையாட்டுகளால் ஏற்படக் கூடிய பாதிப்புகளை உரிய தரவுகளுடன் ஆராய்வது, இவற்றை விளையாட தூண்டும் விளம்பரங்கள் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கங்களை கூர்ந்தாய்வு செய்வது, ஆன்லைன் விளையாட்டை விளையாடுவதற்கான கட்டணங்களை குறைப்பதற்கான சாத்திய கூறுகளை ஆராய்வது, அவற்றை உரிய முறையில் கட்டுப்படுத்துவது, ஆன்லைன் விளையாட்டு நிறுவனங்களின் சட்ட விதிமுறைகளை கண்டறிவது உள்ளிட்டவைகள் குறித்து 2 வாரங்களுக்குள் தனது பரிந்துரைகளை அரசுக்கு அளிக்க வேண்டும். மேலும், இக்குழுவிற்கு தேவையான ஆதரவுகளை காவல் துறை இயக்குனர் வழங்க வேண்டும்.

**டிஎன்பிஎஸ்சி தலைவராக முனிய நாதன் நியமனம்:**

- டிஎன்பிஎஸ்சி தலைவராக 2020 - ல் ஐஏஎஸ் அதிகாரி பாலச் சந்திரன் பொறுப்பேற்றார். இவர் கடந்த ஜூன் 9 - ம் தேதி ஓய்வு பெற்றார். இதையடுத்து, புதிய தலைவரை தேர்வு செய்வதற்கான பணிகள் நடந்து வருகின்றன.
- இந்நிலையில், தற்காலிக அடிப்படையில் டிஎன்பிஎஸ்சி உறுப்பினரான ஐஏஎஸ் அதிகாரிசி முனிய நாதன், தேர்வாணையத்தின் பொறுப்பு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இவர் ஏற்கெனவே நாகை மாவட்ட ஆட்சியர், ஆதி திராவிடர் நலம் மற்றும் தொழிலாளர் நலத் துறையில் ஆணையர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்துள்ளார்.

**ஏடிபி சேலஞ்சர் டென்னிஸ் - தமிழக வீரர்கள் ஜீவன், ரூ. ராம் சாம்பியன்:**

- ஸ்லோவாக்கியாவில் பிராட்டிஸ்லாவா ஓபன் ஏடிபி சேலஞ்சர் பயண டென்னிஸ் போட்டியின் 3 - வது பதிப்பு நடந்தது.
- களி மண் தரையில் நடந்த போட்டியின் இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்தியா சார்பில் தமிழக வீரர்கள் ஜீவன் நெடுஞ்செழியன், ரூ. ராம் பாலாஜி இணை களம் கண்டது.
- அவர்களுடன் உக்ரைன் இணை விளாடிஸ்லாவ் மனாஃபோவ், ஒலெக் பிரிஹோட்கோ ஆகியோர் மோதினர்.
- டை பிரேக்கர் வரை நீண்ட முதல் செட்டை 7 - 8 (8 - 6) என்ற புள்ளி கணக்கில் ஜீவன் இணை கைப்பற்றியது.
- தொடர்ந்து 2 - வது செட்டையும் 6 - 4 என்ற புள்ளி கணக்கில் ஜீவன் இணை எளிதில் வசப்படுத்தியது. அதனால் ஜீவன் இணை 2 - 0 என்ற நேர் செட்களில் வெற்றிப் பெற்று பிராட்டிஸ்லாவா ஓபன் ஏடிபி சேலஞ்சர் சாம்பியன் பட்டத்தை வென்றது.

**மாசு கட்டுப்பாட்டு வாரியத் தலைவராக ஜெயந்தி நியமனம் - தமிழக வனம், சுற்றுச்சூழல் துறை செயலர் உத்தரவு:**

- தமிழகத்தில் அரசுத் துறை செயலர்கள், மாவட்ட ஆட்சியர்கள் உள்ளிட்ட 51 ஐஏஎஸ் அதிகாரிகள் இட மாற்றம் செய்யப்பட்டனர். தமிழகம் முழுவதும் 19 மாவட்ட வருவாய் அலுவலர்கள் இட மாற்றம் செய்யப்பட்டனர்.
- இந்நிலையில், இந்திய வனப் பணி (Indian Forest Service) அதிகாரிகள் 7 பேர் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.
- தமிழ் நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத் தலைவராக இருந்த ஏ. உதயன், வண்டலூரில் உள்ள நவீன காட்டுயிர் பாதுகாப்பு மைய இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

- தலைமைச் செயலகத்தில் சுற்றுச் சூழல், பருவ நிலை மாற்றப் பிரிவின் சிறப்பு செயலராக இருந்த எம். ஜெயந்தி, மாசு கட்டுப்பாட்டு வாரியத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- வனம், காட்டுயிர் குற்றத் தடுப்பு பிரிவு கூடுதல் முதன்மை தலைமை வனப் பாதுகாவலராக இருந்த மிதா பானர்ஜி, முதன்மை தலைமை வனப் பாதுகாவலராக பதவி உயர்வு பெறுவதுடன், வன ஆராய்ச்சி, கல்வி பிரிவு முதன்மை தலைமை வனப் பாதுகாவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- சுற்றுச் சூழல், பருவ நிலை மாற்றத் துறை இயக்குநராக இருந்த பி. ராஜேஸ்வரி, வனம் மற்றும் காட்டுயிர் குற்றத் தடுப்பு பிரிவு கூடுதல் முதன்மை தலைமை வனப் பாதுகாவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பக இயக்குநராக இருந்த தீபக் எஸ். பில்கி, சுற்றுச் சூழல் துறை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.




- ஒருங்கிணைந்த கடற்கரை மேலாண்மை திட்டத்தின் திட்ட இயக்குநராக இருந்த பி.சி. அர்ச்சனா கல்யாணி, தலைமைச் செயலகத்தில் சுற்றுச் சூழல், பருவ நிலை மாற்றப் பிரிவு சிறப்பு செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- வண்டலூரில் உள்ள நவீன காட்டுயிர் பாதுகாப்பு மைய இயக்குநராக இருந்த சேவா சிங், கோவையில் உள்ள தமிழ்நாடு வனக் கல்லூரி இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

**தமிழகத்தில் ரூ. 10,790 கோடியில் மின் விநியோக கட்டமைப்பு வசதி - மத்திய அரசு ஒப்புதல்:**

- மத்திய அரசு மறுசீரமைக்கப்பட்ட மின் திட்டத்தை தொடங்கியுள்ளது. இதன் படி, நாடு முழுவதும் சீராக மின் விநியோகம் செய்வதுடன், மின்சாரத்தை கடத்தும் போது ஏற்படும் மின் இழப்பை பூஜ்ஜியமாக குறைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக, ரூ.3.03 லட்சம் கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
- இந்நிலையில், சில அடிப்படை கட்டமைப்பு பணிகளை ரூ. 10,790 கோடி செலவில் மேற்கொள்ள தமிழக மின் வாரியத்துக்கு, மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதில், ரூ. 8,600 கோடி மத்திய அரசு சார்பில் கடனாக வழங்கப்படும்.

- மேலும், இத்திட்டப் பணிகளை 5 ஆண்டுகளுக்குள் முடித்து விட்டால், மத்திய அரசு வழங்கும் கடன் தொகையில் 60 சதவீதம் மானியமாக வழங்கப்படும். மீதியை மட்டும் செலுத்தினால் போதும். மறுசீரமைக்கப்பட்ட மின் திட்டத்தின் கீழ், தமிழகத்தில் ஏற்கெனவே உள்ள மின் வழித் தடங்களில் மீட்டர் பொருத்துவது, புதிதாக மின் வழித் தடங்கள் அமைப்பது உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்படும்.
- ஒவ்வொரு ஆண்டுக்கும் இலக்கு நிர்ணயித்து இப்பணிகள் மேற்கொள்ளப்படும். நடப்பு ஆண்டில் மின் தேவை அதிகரித்து வரும் இடங்களில் 26,300 மின் விநியோக டிரான்ஸ்ஃபார்மர்கள் பொருத்தப்பட உள்ளன. அத்துடன், மின் வழித் தடங்களும் அமைக்கப்படும். இந்த பணிகளுக்காக ரூ. 2,050 கோடி செலவிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

**கல்வி தான் வாழ்க்கை தரத்தை முன்னேற்றும் - 'எண்ணும் எழுத்தும்' திட்டத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்:**

- தமிழகத்தில் கரோனா வைரஸ் பரவல் காரணமாக ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக பள்ளிகள் மூடப்பட்டிருந்தன.
- இதனால், மாணவர்களின் கற்றலில் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய இடைவெளியை குறைக்கும் வகையில் பள்ளிக் கல்வித் துறை சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- அதன் படி, 2025 - ம் ஆண்டுக்குள் 8 வயதுக்கு உட்பட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்கள் அடிப்படை கணிதத் திறனுடன், பிழையின்றி எழுதி படிப்பதை உறுதி செய்யும் விதமாக 'எண்ணும் எழுத்தும்' திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
- இந்த திட்டத்தை திருவள்ளூர் மாவட்டம் அழிஞ்சிவாக்கம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் தொடங்கி வைத்த முதல்வர் மு.க. ஸ்டாலின் 'எண்ணும் எழுத்தும்' திட்டம் தொடர்பான காணொலி, கைபேசி செயலி, திட்டப் பாடல் ஆகியவற்றை வெளியிட்டார்.
- மாணவர்கள், ஆசிரியர்களுக்கு 'எண்ணும் எழுத்தும்' திட்ட பாட நூல்கள், கற்றல் கற்பித்தல் உபகரணங்கள், ஆசிரியர் கையேடு, சான்றிதழ் உள்ளிட்டவற்றையும் வழங்கினார்.

**சென்னை ஐஐடி பேராசிரியர் குழுவுக்கு 'சர்வதேச தண்ணீர் விருது' அறிவிப்பு:**

- சவூதி அரேபியாவின் மறைந்த இளவரசர் சுல்தான் பின் அப்துல் அஜிஸ் அல் சவுத், கடந்த 2002 - ஆம் ஆண்டு அக்டோபர் 21 - ஆம் தேதி, சர்வதேச அறிவியல் விருதைத் தொடங்கினார்.
- இந்த விருது ஆண்டுக்கு இரு முறை வழங்கப்படுகிறது. பல்வேறு பிரிவுகளில் இந்த விருது வழங்கப்படுகிறது. இந்த விருதுடன் ரூ.2 கோடி பரிசு தங்கப் பதக்கம், கோப்பை மற்றும் சான்றிதழ் ஆகியவை வழங்கப்படுகின்றன.

- இந்த நிலையில், சர்வதேச அறிவியல் விருதின் கீழ் வழங்கப்படும், 'இளவரசர் சுல்தான் பின் அப்துல் அஜிஸ் சர்வதேச தண்ணீர் விருது' சென்னை ஐஐடி வேதியியல் துறை பேராசிரியர் டி. பிரதீப்புக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
- தண்ணீர் தொடர்பான ஆராய்ச்சியில் புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் கிரியேட்டிவிட்டி பிரிவில், இந்த விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- பேராசிரியர் டி. பிரதீப்பின் ஆராய்ச்சிக் குழு, சுற்றுச் சூழலைப் பாதிக்காத வகையில், குடிநீரிலிருந்து ஆர்சனிக்கை விரைவாகவும், மலிவு விலையிலும் அகற்றும் நானோ அளவிலான பொருள்களை உருவாக்கியதற்காக இந்த விருது வழங்கப்படுகிறது.
- இதற்கான விருது வழங்கும் விழா நிகழாண்டு செப். 12 - ஆம் தேதி நியூயார்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.
- இதில், பேராசிரியர் டி. பிரதீப் மற்றும் அவரது குழு உறுப்பினர்கள் அவுலா அனில் குமார், சென்னு சுதாகர், ஸ்ரீதாமா முகர்ஜி, அன்ஷூப் மற்றும் மோகன் உதய சங்கர் ஆகியோருக்கு விருது வழங்கப்படவுள்ளது.

**5 ஜி ஏலத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்:**

- 5 ஜி அலைக் கற்றை ஏலத்திற்கு பிரதமர் மோடி தலைமையிலான அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- 5 ஜி அலைக் கற்றையை ஏலத்தில் விட தொலைத் தொடர்புத் துறைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ள நிலையில், வரும் ஜூலை மாதத்திற்குள் ஏலத்தை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.
- 4 ஜி அலைக் கற்றையை விட 10 மடங்கு வேகமாக 5 ஜி அலைக் கற்றை செயல்படும் எனக் கூறப்படுகிறது.
- தொலைத் தொடர்பு நிறுவனங்கள் சேவை வழங்குவதில் செலவை குறைக்கும் நோக்கில் 72 ஆயிரத்து 97 மெகா ஹெர்ட்ஸ் அலைக் கற்றை ஏலம் 20 ஆண்டுகள் வரை செல்லுபடியாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- 5 ஜி அலைக் கற்றையை ஏலத்தில் எடுப்பவர்கள் அதற்கான தொகையை 20 தவணைகளாக செலுத்தலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ஏலத்தில் வோடபோன் ஐடியா, பார்தி ஏர்டெல் மற்றும் ரிலையன்ஸ் ஜியோ ஆகிய தொலைத் தொடர்பு நிறுவனங்கள் பங்கேற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- இதற்கிடையில், ஏர்டெல், ஜியோ, வோடோபோன் போன்ற செல்போன் சேவை நிறுவனங்கள், குருகிராம், பெங்களூரு, கொல்கத்தா, மும்பை, சென்னை, சந்திகர், டெல்லி, ஜாம் நகர், அகமதாபாத் ஐதராபாத், லக்னோ, புனே, காந்திநாகர் ஆகிய பகுதிகளில் 5 ஜி சேவை வெள்ளோட்டத்திற்கான மையங்களை தயாராக வைத்திருப்பதால், இந்த நகரங்களில் 5 ஜி சேவை நாட்டிலேயே முதலாவதாக வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களின் உற்பத்தியை பெருக்க இணைய தளம் தொடக்கம்:**

- தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில் தமிழ் நாடு மின் ஆளுமை முகமையால் உருவாக்கப்பட்ட Valar 4.0 (valar.tn.gov.in) இணைய தளத்தை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ் ஆகியோர் தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தனர்.

**மாமல்லபுரத்தில் நடைபெறும் போட்டிக்கான செஸ் ஒலிம்பியாட் ஜோதி ஓட்டம் பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்:**

- சர்வதேச ஒலிம்பிக் சங்கமான எப்.ஐ.டி. ஈ ஒலிம்பிக் பாரம்பரியத்தின் ஒரு பகுதியாக, செஸ் ஒலிம்பியாட் ஜோதி தொடர் ஓட்டத்தை தொடங்கியுள்ளது.
- செஸ் விளையாட்டில் இந்தியாவிற்கு உள்ள தொடர்பை மேலும் உச்சத்திற்கு எடுத்துச் செல்லும் விதமாக, செஸ் ஒலிம்பியாட்டுக்கான ஜோதி தொடர் ஓட்டம் இனி எப்போதும் இந்தியாவிலிருந்தே தொடங்கி போட்டி நடைபெறும்.
- டெல்லியில் உள்ள இந்திரா காந்தி விளையாட்டரங்கில் நடந்த விழாவில், எப்.ஐ.டி. ஈ தலைவர் அர்கடி துவார்கோவிச் ஒலிம்பியாட் ஜோதியை பிரதமர் மோடியிடம் வழங்க, அவர் அதனை கிராண்ட்மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்திடம் ஒப்படைத்தார்.
- இந்த ஜோதி நாடு முழுவதும் 40 நாட்களுக்குள் 75 நகரங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, சென்னை அருகே உள்ள மாமல்லபுரத்தில் ஏற்றி வைக்கப்படும். அனைத்து இடங்களிலும் அந்தந்த மாநிலத்தைச் சேர்ந்த செஸ் கிராண்ட் மாஸ்டர்கள் இந்த ஜோதியை பெற்றுக் கொள்வார்கள்.

- இந்த நடைமுறை முதன் முதலாக, சென்னை அருகே மகாபலிபுரத்தில் வரும் ஜூலை - ஆகஸ்டில் நடைபெறவுள்ள 44 - ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டியிலிருந்து தொடங்க இருக்கிறது. அதன் பிறகு இனி செஸ் ஒலிம்பியாட் நடைபெறும் போதெல்லாம் அதற்கு முன்பாக இந்த ஜோதி ஓட்டம் நடத்தப்படும். இந்தியாவில் முதன் முறையாக செஸ் ஒலிம்பியாட் போட்டி நடைபெறும் நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.
- ஒலிம்பிக்கிற்கு ஏதென்ஸ் போல, செஸ் விளையாட்டின் பிறப்பிடமாக இருக்கும் இந்தியாவிலிருந்தே இனி ஒவ்வொரு முறையும் இந்த ஒலிம்பியாட் ஜோதி ஓட்டம் தொடங்கும். அதன் பிறகு, சர்வதேச செஸ் சம்மேளனத்தில் உறுப்பினராக இருக்கும் நாடுகளில் வலம் வரும் அந்த ஜோதி, இறுதியாக போட்டி நடைபெற இருக்கும் நாட்டையும், சம்பந்தப்பட்ட நகரத்தையும் வந்தடையும்.
- தற்போது மகாபலிபுரத்தில் நடைபெற இருக்கும் செஸ் ஒலிம்பியாட் போட்டிக்கு இன்னும் 50 நாள்களே இருப்பதால், இந்த அறிமுக 'ஜோதி ஓட்டமானது இந்தியாவுக்குள்ளாக மட்டுமே நடக்கவுள்ளதாக சம்மேளனம் தெரிவித்துள்ளது. ஜோதியை ஏந்தி ஓடுபவர்களில் ஒருவராக இந்திய செஸ் நட்சத்திரமான விஸ்வநாதன் ஆனந்தும் இருப்பார்.
- 44 - ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டியானது மகாபலிபுரத்தில் வரும் ஜூலை 28 முதல் ஆகஸ்ட் 10 வரை நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்க இதுவரை 187 நாடுகளில் இருந்து 343 அணிகள் ஓபன் மற்றும் மகளிர் பிரிவுகளில் பதிவு செய்துள்ளன.

**புதுக்கோட்டை மன்னர் ராஜ கோபால தொண்டைமானுக்கு நினைவு மணி மண்டபம் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவிப்பு:**

- தமிழகத்தில் 300 ஆண்டுகள் பாரம்பரியம் கொண்ட புதுக்கோட்டை சமஸ்தானத்தின் 9 -வது மன்னரான ராஜா ராஜ கோபால தொண்டைமான் தனது பதவிக் காலத்தில் புதுக்கோட்டை மக்களின் நலனிற்காக கல்வி, போக்குவரத்து, விவசாயம், நீர்ப் பாசனம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளை ஏற்படுத்தி தந்த பெருமைக்குரியவர்.
- அவருக்கு பெருமை சேர்க்கும் வகையில், மாமன்னரின் உருவச் சிலையினை 14.3.2000 அன்று புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கலைஞர் திறந்து வைத்து, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு மன்னர் ராஜ கோபால தொண்டைமான் மாளிகை என்றும் பெயர் சூட்டினார்.

- மன்னர் ராஜ கோபால தொண்டைமான் நூற்றாண்டு விழா கொண்டாடும் இந்நன்னாளில், மன்னரின் எளிமையையும், மக்களுக்கு ஆற்றியுள்ள அரும்பணிகளையும் நினைவு கூரும் வகையில், தமிழ் நாடு அரசின் சார்பில் புதுக்கோட்டை நகரில் மன்னர் ராஜ கோபால தொண்டைமான் அருங்காட்சியகத்துடன் கூடிய நினைவு மணி மண்டபம் அமைக்கப்படும்.

**மாணவர்களுக்கு "ஊஞ்சல் இதழ்", ஆசிரியர்களுக்கு "கனவு ஆசிரியர்" இதழ் - அரசாணை வெளியீடு:**

- மாணவர்களின் வாசிப்புத் திறனை ஊக்குவிக்கவும் அவர்களின் உள்ளார்ந்த படைப்புத் திறன்களை வெளிப்படுத்தும் வகையிலும் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தொடக்க வகுப்பு மாணவர்களுக்கு ஊஞ்சல் இதழும், உயர் வகுப்பு மாணவர்களுக்கு தேன் சிட்டு இதழும் மாதமிருமுறை வெளியிடப்படும்.
- மேலும், ஆசிரியர்களுக்கான படைப்புத் தளத்தை உருவாக்கவும் சிறந்த கற்றல் கற்பித்தல் முறைகளைப் பரிமாறிக் கொள்ளவும் கனவு ஆசிரியர் என்ற மாத இதழ் வெளியிடப்படும்.
- சுமார் ரூ.7 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்று 2022 - 2023 ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் போது அமைச்சர் அன்பில் மகேஷ் அறிவித்திருந்தார்.
- தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் மாதமிருமுறை தொடக்க வகுப்பு மாணவர்களுக்கும் "ஊஞ்சல் இதழ்", உயர் வகுப்பு மாணவர்களுக்கு "தேன் சிட்டு" இதழ், ஆசிரியர்களுக்கு "கனவு ஆசிரியர்" இதழை வெளியிட உத்தரவிட்டும், நிதி ஒதுக்கீடு செய்தும் தமிழ் நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

**நிதி ஆயோக் தலைவராக பரமேஸ்வரன் ஐயர் நியமனம்:**

- தற்போது நிதி ஆயோக் அமைப்பின் தலைவராக உள்ள அமிதாப் காந்த்தின் பதவிக் காலம் இம்மாதம் 30 - ம் தேதியுடன் நிறைவு பெறுகிறது. அதைத் தொடர்ந்து அவரது பதவிக்கு பரமேஸ்வரன் ஐயர் நியமிக்கப்பட்டுள்ளார்.



- 17 ஆண்டு ஐஏஎஸ் அதிகாரியாக பணி புரிந்து 2009 - ம் ஆண்டு விருப்ப ஓய்வு பெற்றார். பின்னர் உலக வங்கியின் குடிநீர் மற்றும் சுகாதார பிரிவில் பணியாற்றினார்.
- 2016 - ம் ஆண்டு முதல் 2020 - ம் ஆண்டு வரை ஜல்சக்தி அமைச்சகத்தின் கீழான துறையில் செயலராக பணியாற்றினார்.
- குடிநீர் மற்றும் சுகாதாரம் சார்ந்து 25 ஆண்டுகளுக்கும் மேலாக சர்வதேச அனுபவம் பெற்றவர். வியட்நாம், சீனா, எகிப்து, லெபனான் ஆகிய நாடுகளில் பணியாற்றியவர்.

**வங்கியில் கடன் வாங்கிய நிறுவனங்கள் - தமிழ் நாடு, டில்லி, மஹாராஷ்டிரா முன்னிலை:**

- கடன் தகவல் நிறுவனமான 'சி. ஆர்.ஐ. எப்., ஹை மார்க்' தரவுகளின் படி, இந்த மூன்று மாநிலங்களிலிருந்து தான் நிறுவனங்கள் அதிகளவில் கடன் பெற்றிருப்பது தெரியவந்துள்ளது. மொத்த கடனில் 64 சதவீதம், இந்த மூன்று மாநிலங்களிலிருந்தே பெறப்பட்டுள்ளது.
- அரசாங்கம், கொரோனா பாதிப்புகளிலிருந்து மீட்சி பெற்று, பொருளாதார வளர்ச்சி அடைய, இத்தகைய நிறுவனங்களுக்கு கடன் வசதியை சுலபமாக்கி அறிவித்திருந்தது.
- தரவுகளின் படி மும்பை, மும்பை புறநகர், சென்னை, கோல்கட்டா, பெங்களூரு ஆகிய ஐந்து மாவட்டங்களிருந்து, நிறுவனங்கள் அதிக அளவில் கடன் வசதியை பயன்படுத்தி உள்ளன.
- இந்த ஐந்து இடங்களிலிருந்து பெறப்பட்ட கடன், மொத்த கடனில் 56 சதவீதம் ஆகும். கடன் பெற்ற நிறுவனங்களின் எண்ணிக்கையை பொறுத்தவரை, பெங்களூரு, மும்பை, புனே, அகமதாபாத், லக்னோ ஆகிய மாவட்டங்கள் முன்னணி வகிக்கின்றன.
- கடனை திருப்பி பெறுவதை பொறுத்தவரை குஜராத், ஹரியானா, ராஜஸ்தான் ஆகியவை இடர் மிகுந்தவையாக உள்ளன என்றும் தரவுகள் தெரிவிக்கின்றன.
- ஒட்டு மொத்த கடன் வினியோகம், கடந்த நிதியாண்டில், அதற்கு முந்தைய நிதியாண்டை விட 5 சதவீதம் அதிகரித்து, 37.29 லட்சம் கோடி ரூபாயாக உயர்ந்து உள்ளது.
- மேலும், சராசரி கடன் கடந்த நிதியாண்டில் 72.4 லட்சம் ரூபாயாக உள்ளது. குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன் மதிப்பில் 70 சதவீதம், தனியார் வங்கிகளால் வழங்கப்பட்டு உள்ளன என்பதும் தரவுகளால் தெரிய வந்துள்ளது.

**தமிழகம் முழுவதும் கல்லூரி கனவு திட்டம் முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்:**

- 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் 12 - ம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கான உயர் கல்விக்கு வழி காட்டும் 'கல்லூரி கனவு' நிகழ்ச்சியை சென்னை, நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.
- நிகழ்ச்சியில் உயர் கல்வித் துறை, தொழில் நுட்ப கல்வி இயக்ககம், அண்ணா பல்கலைக் கழகம், தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக் கழகம், தமிழ் நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக் கழகம், தமிழ் நாடு ஜெயலலிதா மீன் வள பல்கலைக் கழகம், தமிழ் நாடு கால் நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம், தமிழ் நாடு எம்ஜிஆர் பல்கலைக் கழகம், கல்லூரி இயக்குனரகம் மற்றும் தமிழ் நாடு திறன் மேம்பாட்டு கழகம் சார்பில் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.
- ஹெச்.சி. எல். நிறுவனத்திற்கும் தமிழ் நாடு திறன் மேம்பாட்டு கழகத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் முதல்வர் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.

**தூத்துக்குடியில் சிப்பெட் கல்வி மையம்:**

- சென்னை கிண்டி தொழிற் பேட்டையில், 'சிப்பெட்' என்ற, மத்திய பிளாஸ்டிக்ஸ் தொழில் நுட்ப நிறுவனம், 1968 - ல் துவங்கப்பட்டது.
- பிளாஸ்டிக்ஸ் தொடர்பான இளநிலை மற்றும் முதுநிலை பட்டம் மற்றும் டிப்ளமா படிப்புகள் இங்கு கற்பிக்கப்படுகின்றன.
- இந்நிலையில், கிண்டியில் உள்ள சிப்பெட் வளாகத்தில், 59.19 கோடி ரூபாய் மதிப்பில், ஆறு அடுக்கு உடைய தொழில் நுட்ப மையம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சி நடந்தது.
- மத்திய ரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா, தொழில் நுட்ப மையத்திற்கான அடிக்கல் நாட்டினார்.

**ஆன்லைன் ரம்மியை தடை செய்ய அமைக்கப்பட்ட ஓய்வு பெற்ற நீதிபதி சந்துரு குழு அறிக்கை முதல்வர் மு.க. ஸ்டாலினிடம் சமர்ப்பிப்பு:**

- தமிழ்நாட்டில் ஆன்லைன் ரம்மி போன்ற இணைய தள அடிப்படையிலான விளையாட்டுகளில் பொது மக்கள், குறிப்பாக நடுத்தர மற்றும் ஏழை குடும்பங்களைச் சார்ந்தவர்கள் ஈடுபட்டு, அதில் பெருமளவில் பணத்தை இழந்து வந்தனர். இதனால் பல்வேறு சமூகப் பொருளாதாரக் குற்றங்களும், தற்கொலை சம்பவங்களும் நிகழ்வதை அரசின் கவனத்திற்கு பல்வேறு சமூக அமைப்புகள் கொண்டு வந்தன.

- இதையடுத்து, கடந்த 10 - ம் தேதி ஓய்வு பெற்ற சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி கே.சந்துரு தலைமையில், ஆன்லைன் ரம்மி விளையாட்டினால் ஏற்படக் கூடிய நிதியிழப்பு மற்றும் தற்கொலை உள்ளிட்ட பெரும் ஆபத்தை விளைவிக்கும் தன்மையைக் கண்டறியவும், இந்த விளையாட்டுகளினால் ஏற்படக் கூடிய பாதிப்புகளை உரிய தரவுகளுடன் ஆராயவும், விளையாட்டுகளை விளையாட தூண்டும் விளம்பரங்கள் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கங்களை கூர்ந்தாய்வு செய்து, அவற்றை உரிய முறையில் கட்டுப்படுத்தவும், மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரசுக்கு உரிய பரிந்துரைகளை செய்திடவும் குழு ஒன்றினை அமைத்திட முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணையிட்டார்.
- இந்த குழுவில் ஐ.ஐ.டி. தொழில் நுட்ப வல்லுநர் டாக்டர் சங்கர ராமன், ஸ்நேகா அமைப்பின் நிறுவனரும், உளவியலாளருமான டாக்டர் லட்சுமி விஜய குமார், ஏடிஜிபி வினித் தேவ் வான்கடே ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். இக்குழு தனது அறிக்கையை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலினிடம் அளித்தது.

**ஆன்லைன் ரம்மி தடைக்கு அவசரச் சட்டம் - தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு:**

- கடந்த ஜூன் 10 - ம் தேதி சென்னை உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி கே. சந்துரு தலைமையில் குழு அமைக்கப்பட்டது. இக்குழுவில், ஐஐடி தொழில் நுட்ப வல்லுநர் சங்கர ராமன், ஸ்நேகா அமைப்பின் நிறுவனரும், உளவியலாளருமான லட்சுமி விஜய குமார், காவல் துறை கூடுதல் டிஜிபி வினித் தேவ் வான்கடே ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.
- இந்தக் குழு தனது அறிக்கையை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலினிடம் சமர்ப்பித்தது. அதன் படி தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் தொடங்கியது.
- இதில், துரை முருகன், நேரு உள்ளிட்ட அமைச்சர்கள், தலைமைச் செயலர் வெ. இறையன்பு, நிதித் துறைச் செயலர் நா. முருகானந்தம், தொழில் துறைச் செயலர் ச. கிருஷ்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.
- இந்தக் கூட்டத்தில், ஆன்லைன் ரம்மி விளையாட்டை தடை செய்வதற்காக அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை விவாதிக்கப்பட்டு, விளையாட்டை தடை செய்வதற்கான அவசரச் சட்டம் தொடர்பாக முடிவெடுக்கப்பட்டது.

- தொடர்ந்து, தமிழகத்தில் தொழில் தொடங்க விண்ணப்பித்த புதிய தொழில் நிறுவனங்களுக்கு சலுகைகள், அனுமதிகள் வழங்குவதற்கான ஒப்புதல்களும் அளிக்கப்பட்டன.

**தடகளம் - தன லட்சுமிக்கு தங்கம்:**

- கஜகஸ்தானில் நடைபெறும் காசனோவ் நினைவு தடகள மீட்டில் இந்தியரும், தமிழகத்தைச் சேர்ந்தவருமான எஸ். தனலட்சுமி, மகளிருக்கான 200 மீட்டர் ஓட்டத்தில் தங்கப் பதக்கம் வென்றார்.
- பந்தய இலக்கை 22.89 விநாடிகளில் எட்டிய அவர், தனது புதிய தனிப்பட்ட பெஸ்ட்டைப் பதிவு செய்தார். இதே பிரிவில் களம் கண்ட மற்றொரு இந்தியரான டூட்டி சந்த், 23.60 விநாடிகளில் வந்து 3 - ஆம் இடம் பிடித்தார்.

**சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களை வளர்ச்சி பாதைக்கு அழைத்து சென்றதற்காக தேசிய விருது:**

- மத்திய அரசின் "நிடி ஆயோக்" அமைப்பு நாட்டின் பல மாநிலங்களிலுள்ள மாவட்டங்களை ஆய்வு மேற்கொண்டு, அதில் இருந்து 112 பின் தங்கிய மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டது.
- அவற்றை முன்னேற்றும் அடிப்படையில் கடந்த 2018 - ல் முன்னேற விழையும் மாவட்ட திட்டத்தை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். இவற்றில் விருது நகர் மாவட்டம் தேர்வு செய்யப்பட்டது.
- அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களை வளர்ச்சி பாதைக்கு அழைத்து சென்றதற்காக, தேசிய விருதுக்கு விருதுநகர் மாவட்டமானது தேர்வு செய்யப்பட்டு உள்ளது.

**ஒரு முறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக்கிற்கு ஜூலை 1 முதல் தடை:**

- சுற்றுச் சூழல் அமைச்சக அறிவிப்பின் படி, பாலிஸ்டிரீன் மற்றும் விரிவாக்கப்பட்ட பாலிஸ்டிரீன் பொருட்கள் உட்பட ஒரு முறை பயன்படுத்தக் கூடிய பிளாஸ்டிக் உற்பத்தி, இறக்குமதி, இருப்பு, விநியோகம், விற்பனை மற்றும் பயன்பாடு ஆகியவை ஜூலை 1, 2022 முதல் தடை செய்யப்படும். ஒரு முறை மட்டுமே பயன்படுத்தக் கூடிய பிளாஸ்டிக்கை கைவிடுவதற்கு அரசாங்கம் போதுமான அவகாசம் அளித்துள்ளது.
- பலூன்களுக்கான பிளாஸ்டிக் குச்சிகள், பிளாஸ்டிக் குச்சிகள் கொண்ட காதணிகள், ஐஸ்கிரீம் குச்சிகள், மிட்டாய் குச்சிகள், பிளாஸ்டிக் கப்புகள், பிளாஸ்டிக் கண்ணாடிகள், பிளாஸ்டிக் அல்லது பிவிசி 100 மைக்ரானுக்கு குறைவான பேனர்கள், பிளாஸ்டிக் ஸ்பூன்ஸ், போர்க்ஸ், கத்திகள், ஸ்ட்ராக்கள், கட்லரி மற்றும் இனிப்புப் பெட்டிகள், சிகரெட் பாக்கெட்டுகள் மற்றும் அழைப்பிதழ் அட்டைகளில் சுற்றப்படும் பிளாஸ்டிக் பிலிம்கள் ஆகியவை தடை செய்யப்பட்ட பொருட்களாகும்.

**ஆஸ்கர் அகாடமி உறுப்பினராக தேர்வான முதல் தமிழ் நடிகர் சூர்யா:**

- அமெரிக்காவைச் சேர்ந்த ஆஸ்கர் அகாடமி, ஆண்டு தோறும் சிறந்த திரைப்படம், நடிகர், நடிகையர் உள்ளிட்டோரை தேர்வு செய்து விருது வழங்குகிறது.
- இந்த அமைப்பு, அமெரிக்கா நீங்கலாக, 53 நாடுகளில், திரைத் துறையின் பல்வேறு பிரிவுகளில் சிறந்த சேவையாற்றி வரும் 397 கலைஞர்களை, ஆஸ்கர் அகாடமி உறுப்பினர்களாக தேர்வு செய்துள்ளது.
- ஜெய் பீம் உள்ளிட்ட பல படங்களில் நடித்த சூர்யா, ஆஸ்கர் அகாடமி உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- ஆஸ்கர் அகாடமி உறுப்பினராக தேர்வான முதல் தமிழ் நடிகர் என்ற சிறப்பை சூர்யா பெற்றுள்ளார்.
- ஹிந்தி, தமிழ் படங்களில் நடித்த கஜோல், இந்தாண்டு சிறந்த ஆவணப் படமாக தேர்வாகி ஆஸ்கர் வென்ற ரைட்டிங் வித் பயர் படத்தின் இயக்குனர்கள் கோஷ், தாமஸ், சம்சாரா என்ற திபெத்திய படத்தின் இயக்குனர் நலின் உள்ளிட்டோரும் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.
- இசையமைப்பாளர் ஏ. ஆர். ரகுமான், நடிகர்கள் அமிதாப் பச்சன், ஷாருக் கான், அமீர் கான், சல்மான் கான், நடிகை வித்யா பாலன் உள்ளிட்டோர் ஏற்கனவே ஆஸ்கர் அகாடமி உறுப்பினர்களாக உள்ளனர்.

**மியூசிக் அகதமி சென்னையினால் வழங்கப்படும் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான சங்கீத கலாநிதி விருது (Sangita Kalanidhi Award) அறிவிக்கப்பட்டுள்ளது:**

- 2020 ஆம் ஆண்டிற்கான் சங்கீத கலாநிதி விருது வாய்ப்பாட்டு கலைஞர் நெய்வேலி R. சந்தான கோபால் என்பவருக்கும், 2021 ஆம் ஆண்டிற்கான விருது மிருதங்க வித்வான் திருவாரூர் பக்தவச்சலம் என்பவருக்கும், 2022 ஆம் ஆண்டிற்கான விருது வயலின் இசைக் கலைஞர்கள் GJR கிருஷ்ணன் மற்றும் GJR விஜய லஷ்மி ஆகியோருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.
- லண்டனில் உள்ள வாக்வரெல்லி சிமண்ட்ஸ் (கியூஎஸ்) உயர் கல்வி பகுப்பாய்வு நிறுவனம் வெளியிட்டுள்ள 2023 - ஆம் ஆண்டுக்கான சிறந்த மாணவ நகரங்கள் தர வரிசையில், சென்னை 125 வது இடத்தைப் பெற்றுள்ளது.



**நவி மும்பைத் தமிழ்ச் சங்கத்தின் கட்டட வளாக விரிவாக்கத்துக்கு, தமிழக அரசு சார்பில் ரூ.50 லட்சம் நிதியை முதல்வர் மு.க. ஸ்டாலின் வழங்கினார்.**

- நாட்டின் மொத்த உள் நாட்டு உற்பத்தி விகிதத்தில் இரண்டாவது அதிக பங்களிப்பை வழங்கும் மாநிலமாக தமிழ் நாடு திகழ்கிறது என மத்திய ஜவுளித் துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.
- மொத்த மின்சார உற்பத்தியில், காற்றலை வாயிலாக அதிக பங்களிப்பை வழங்குவதில் தமிழகம் உலக அளவில் ஒன்பதாம் இடத்தில் உள்ளதாகவும் குறிப்பிட்டார்.
- கார் உற்பத்தியிலும் உலகின் பத்து பெரிய உற்பத்தி மையங்களில் ஒன்றாக தமிழகம் திகழ்கிறது.
- நாட்டின் மொத்த ஜவுளி உற்பத்தி நிறுவனங்களில் மூன்றில் ஒரு பகுதி நிறுவனங்கள் அமைந்திருப்பதன் மூலம் தமிழகம், இந்தியாவின் ஜவுளி பள்ளத்தாக்காகவும், மொத்த நூல் உற்பத்தியில் நாற்பது சதவீதத்தை பெற்றிருப்பதன் மூலம் இந்தியாவின் நூல் கிண்ணமாகவும் திகழ்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**தமிழகத்தில் ரூ.171 கோடியில் அமைக்கப்பட்ட ஐந்து புதிய தொழிற்பேட்டைகளை முதல்வர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்:**

- செங்கல்பட்டு மாவட்டம் ஆலத்தூர் கிராமத்தில், திருவண்ணாமலை மாவட்டம் பெரிய கோளப்பாடி கிராமத்தில், சேலம் மாவட்டம் பெரிய சீரகப்பாடி கிராமத்தில், நாமக்கல் மாவட்டம் ராசம்பாளையம் கிராமத்தில் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் தண்டரை கிராமத்தில் இந்த தொழிற்பேட்டைகள் அமைந்துள்ளன.
- ஆன்லைன் ரம்மியைத் தடை செய்வது குறித்து அமைக்கப்பட்ட நீதிபதியுமான கே. சந்துரு தலைமையிலான குழுவின் அறிக்கை, முதல்வர் மு.க. ஸ்டாலினிடம் தாக்கல் செய்யப்பட்டது.

**உணவுப் பாதுகாப்பில் நாட்டிலேயே தமிழ் நாடு முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளது:**

- பொது மக்களுக்கு பாதுகாப்பான உணவை உறுதி செய்வதில் உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் சார்பில், ஆண்டு தோறும் உணவுப் பாதுகாப்புக் குறியீடு வெளியிடப்படுகிறது.
- அந்த வகையில், 2021 - 22 ஆம் ஆண்டிற்கான உணவுப் பாதுகாப்பு குறியீடு வெளியிடப்பட்டது.

Adda247 தமிழ்

- இதில், பெரிய மாநிலங்கள் பட்டியலில் தமிழ் நாடு இந்தியாவிலேயே முதலிடம் பிடித்துள்ளது.
- தமிழ் நாட்டில் திருவள்ளூர், காஞ்சிபுரம், சேலம், கோயம்புத்தூர், சென்னை, திருநெல்வேலி, ஈரோடு, மதுரை, தூத்துக்குடி, திருப்பூர், திண்டுக்கல் ஆகிய 11 மாவட்டங்கள் சிறந்த செயல்பாட்டிற்கான விருதினையும் பெற்றன.
- இரண்டாவது இடத்தில் குஜராத், மூன்றாவது இடத்தில் மகாராஷ்டிரா இடம் பெற்றுள்ளது.
- சிறிய மாநிலங்கள் பட்டியலில் கோவா முதலிடம் பிடித்துள்ளது.

**சைமா டெக்ஸ்ஃ போ 2022:**

- கோவையில் சர்வதேச ஜவுளி இயந்திரங்கள், உதிரி பாகங்கள் கண்காட்சியான சைமா டெக்ஸ்ஃ போ 2022 (SIMA Texfair 2022) 25.6.2022 அன்று ஜவுளித் துறை அமைச்சர் பியூஸ் கோயல் தொடங்கி வைத்தார்.

**'கல்லூரிக் கனவு' நிகழ்ச்சி:**

- சென்னையைத் தொடர்ந்து கல்லூரி கனவு நிகழ்ச்சி அனைத்து மாவட்டங்களிலும் ஜூன் 29, 30 மற்றும் ஜூலை 1, 2 ஆகிய தேதிகளில் நடைபெறும் என தமிழக அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**2022 ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி விருது அறிவிக்கப்பட்டுள்ளது:**

- 2022 ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி தமிழ் மொழிப் பிரிவில் மொழி பெயர்ப்புக்கான விருதுக்கு எழுத்தாளரும், மூத்த பத்திரிகையாளருமான மாலன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- சைரஸ் மிஸ்திரி எழுதிய ஆங்கில நாவலான க்ரோனிக்கல் ஆஃப் கார்ப்ஸ் பியரர்' நூலை 'ஒரு பிணந்தூக்கியின் வரலாற்றுக் குறிப்புகள்' என்ற தலைப்பில் மாலன் தமிழில் மொழி பெயர்த்தமைக்காக இவ்விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு பனை மரத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் தலைவராக எர்ணாவூர் நாராயணன் நியமிக்கப்பட்டுள்ளார்.**

- பனை மரத் தொழிலாளர்களின் நலனுக்காக கடந்த 2006 - ஆம் ஆண்டில் நல வாரியம் தோற்றுவிக்கப்பட்டது.
- இந்த வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு கல்வி, மகப்பேறு, திருமணம், விபத்து, உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு நலத் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

**திருவள்ளூர் உணவுத் திருவிழாவிற்கு 'டிரைம்ப் உலக சாதனை சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது:**

- திருவள்ளூர் மாவட்டத்தில் உணவுத் திருவிழா நடைபெற்றது. இதில் பல்வேறு உணவகங்களில் இருந்து ஒரு லட்சம் லிட்டர் உபயோகித்த சமையல் எண்ணெயை பயோ - டீசலாக மாற்றும் வகையில் ஒரே நாளில் பெறப்பட்டது. மேலும் ஒரு லட்சம் நபர்களுக்கு உபரி உணவு ஒரே நாளில் வழங்கினர்.
- திருநங்கைகளுக்கான ஆய்வு மற்றும் ஆவண மையம் இந்தியாவிலேயே முதன் முறையாக மதுரையில் தொடங்கப்பட்டுள்ளது.
- தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் பொறுப்பு தலைவராக, தேர்வாணைய உறுப்பினர் சி. முனிய நாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

**"தொழிலணங்கு" நிகழ்ச்சி:**

- மதுரையில் தமிழ் நாடு தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் சார்பில் பெண் தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் "தொழிலணங்கு" நிகழ்ச்சி 18.6.2022 அன்று நடந்தது. இதில் நிதி மற்றும் மனித வள மேலாண்மை அமைச்சர் பழனி வேல் தியாக ராஜன் கலந்து கொண்டு நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்

**செயற்கை கருத்தரிப்பு தொழில் நுட்பச் சட்டம் மற்றும் வாடகைத் தாய் ஒழுங்குமுறைச் சட்டம் தமிழகத்தில் அமல்:**

- செயற்கை கருத்தரிப்பு தொழில் நுட்பச் சட்டம் மற்றும் வாடகைத் தாய் ஒழுங்கு முறைச் சட்டத்தை தமிழகத்தில் அமல்படுத்துவதற்காக சிறப்புக் குழுவை அரசு அமைத்துள்ளது. மாநில அளவில் சுகாதாரத் துறை கூடுதல் செயலர் தலைமையிலும், மாவட்ட அளவில் இணை இயக்குநர்கள் தலைமையிலும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**தமிழக அரசின் S2G முன்னெடுப்பு:**

- ஸ்டார்ட் அப் நிறுவனங்களை ஊக்குவிக்கும் விதமாக, ஸ்டார்ட் அப்களின் தயாரிப்புகளை, அரசே கொள் முதல் செய்து ஊக்குவிக்கும் புதிய திட்டத்தை தமிழக அரசு அறிவித்துள்ளது.
- இதன்படி தேர்வு செய்யப்படும் ஸ்டார்ட் அப் நிறுவனங்களிடம் இருந்து 50 லட்சம் வரை அவர்களின் தயாரிப்புகளை அரசே கொள் முதல் செய்ய இத்திட்டம் வழி வகை செய்கிறது.



**எழுத்தாளர் சின்னப்ப பாரதி அவர்கள் 13.6.2022 அன்று காலமானார்:**

- நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்தவரும், பொதுவுடைமை சித்தாந்தங்களை முதன்மையாக கொண்டு எழுதி வந்தவருமான எழுத்தாளர் சின்னப்ப பாரதி எழுதிய “சுரங்கம்” நாவலானது மிகவும் புகழ் பெற்றது. இந்த நாவலில் மேற்கு வங்க மாநிலத்தில் நிலக்கரி சுரங்கங்களில் பணியாற்றும் தொழிலாளர்களின் வாழ்வியல் குறித்து விளக்கப்பட்டுள்ளது.

**மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு வேலை வாய்ப்பில் வழங்கப்பட்டுள்ள 4 சதவீத இட ஒதுக்கீட்டை உறுதி செய்ய உயர் நிலைக் குழுவை தமிழக அரசு அமைத்துள்ளது.**

- மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு வேலை வாய்ப்பில் வழங்கப்பட்டுள்ள 4 சதவீத இட ஒதுக்கீட்டை உறுதி செய்ய உயர் நிலைக் குழுவை தமிழக அரசு அமைத்துள்ளது. குழுவின் தலைவராக, மாற்றுத் திறனாளிகள் நலத் துறைச் செயலாளர் இருப்பார்.
- உறுப்பினர்களாக தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு, மனித வள மேலாண்மை ஆகிய துறைகளின் செயலாளர்கள், தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளர், ஆசிரியர் தேர்வு வாரியத் தலைவர், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத் தலைவர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பர்.
- மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர், உறுப்பினர் செயலாளராக இருப்பார்.

**11 ஆம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு:**

- உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் 11 ஆம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு வரும் 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஐக்கிய அரபு அமீரகத்திலுள்ள சார்ஜா நகரில் நடை பெறவிருக்கிறது.

**தமிழ் நாட்டில் "பாரத்நெட்" திட்டம்:**

- தமிழ் நாட்டில் ரூ. 1,627.83 கோடி மதிப்பீட்டிலான பாரத் நெட் திட்டத்தை செயல்படுத்தும் விதமாக கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை ஊராட்சி ஒன்றியம், முத்தலகுறிச்சி கிராமப் பஞ்சாயத்தில் கண்ணாடி இழை கம்பி வடம் பதிக்கும் பணியினை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 10.6.2022 அன்று தொடங்கி வைத்தார்.
- "பாரத் நெட்" திட்டம் என்பது, தமிழ் நாட்டில் உள்ள 12,525 கிராமப் பஞ்சாயத்துகளையும் "கண்ணாடி இழை கம்பி வடம்" மூலம் இணைத்து, அதி வேக அலைக் கற்றை வழங்கும் திட்டமாகும்.
- இத்திட்டம், தமிழ் நாடு அரசின் "தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET)" என்ற சிறப்பு நோக்கு நிறுவனம் வாயிலாக செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் குறைந்த பட்சம் 1 Gbps அளவிலான அலைக் கற்றை அனைத்து 12,525 கிராமப் பஞ்சாயத்துகளுக்கும் வழங்கப்படும்.

- இத்திட்டம் நான்கு தொகுப்புகளாக (A, B, C & D) பிரிக்கப்பட்டு, தொகுப்பு A ல் காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், கிருஷ்ணகிரி. செங்கல்பட்டு, சென்னை (NOC). இராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களும், தொகுப்பு B - ல் கடலூர், அரியலூர், பெரம்பலூர், தர்மபுரி, கள்ளக்குறிச்சி, சேலம், ஈரோடு. நீலகிரி, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களும், தொகுப்பு C - ல் நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, நாமக்கல், கரூர் கோயம்பத்தூர், திருப்பூர், திருச்சிராப்பள்ளி, மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களும், தொகுப்பு D - ல் கன்னியாகுமரி, மதுரை, இராமநாதபுரம், தேனி, தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர், தென்காசி, திண்டுக்கல், சிவகங்கை ஆகிய மாவட்டங்களிலும் செயல்படவுள்ளது.
- இத்திட்டத்தின் மூலம் பொது மக்களுக்கு குறைந்த விலையில் மின்னணு (டிஜிட்டல்) சேவைகள், இணைய வழி கல்வி (e - Education), தொலை மருத்துவம் (Tele Medicine), இணைய தள இணைப்பின் மூலம் வழங்கப்படும் சேவைகளான Services (தொலைபேசி, தொலைக்காட்சி & இணையம்) ஆகியவற்றை வழங்க இயலும்.
- மேலும், அரசு அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் தொழில் நிறுவனங்கள், அதி வேக இணைய தள சேவையினைப் பெறுவதன் மூலம் கிராம அளவில் அரசின் பல்வேறு திட்டங்கள் மக்களை விரைந்து சென்றடையும். அதோடு, புதிய ஊரக வேலை வாய்ப்புகளை உருவாக்கி பொருளாதார நிலை மேன்மையடையவும் இத்திட்டம் வழி வகுக்கும்.
- விரைவான இணைய சேவைகளைப் பெறவும், தமிழகத்தின் அனைத்து கிராமப் பஞ்சாயத்துகளும் பாதுகாப்பான மற்றும் நகர்ப்புறம் மற்றும் திறன் இடைவெளியைக் குறைக்கவும் இத்திட்டம் உதவிடும்.

**235 வது பெரியார் நினைவு சமத்துவபுரங்களை முதல்வர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்:**

- 235 வது பெரியார் நினைவு சமத்துவபுரங்களை சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி அருகேவுள்ள கோட்டை வேங்கைபட்டியில் முதல்வர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார். இது சிவகங்கை மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 9 வது சமத்துவபுரமாகும்.

**மாற்றுத் திறனாளிகளுக்கான அனைத்தும் சாத்தியம்' என்ற அருங்காட்சியகத்தை முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் 6.6.2022 அன்று திறந்து வைத்தார்.**

- மாற்றுத் திறனாளிகளுக்கான அனைத்தும் சாத்தியம்' என்ற அருங்காட்சியகத்தை சென்னை, காமராஜர் சாலையில் மாற்றுத் திறனாளிகள் ஆணையர் அலுவலகத்தில் முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் 6.6.2022 அன்று திறந்து வைத்தார். ரூ.1 கோடி மதிப்பில் இந்த அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

**இரயில்வே:**

- இரயில்வேயில் ஊட்டி மலை இரயிலில் 'பிரேக்ஸ் மேன் பணிக்கு முதன் முறையாக சிவ ஜோதி (வயது 46) என்ற பெண் நியமிக்கப்பட்டுள்ளார்.
- மத்திய அரசின் பாரத் கௌரவ் (Bharat Gaurav) ரயில் திட்டத்தின் மூலம் இந்தியாவின் முதல் தனியார் ரயில் சேவை கோவையில் இருந்து சீரடிக்கு (மகாராஷ்டிரா) 14.6.2022 அன்று தனது முதலாவது பயணத்தை தொடங்கியது.
- இந்த ரயில் சேவை வாரம் ஒரு முறை இயக்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான டிக்கெட் விற்பனை, பராமரிப்பு பணிகள், பயணிகளுக்கான அடிப்படை வசதிகள் உள்ளிட்ட அனைத்தையுமே இந்த ரயிலை இயக்கும் தனியார் நிறுவனமே மேற்கொள்ள வேண்டும்.

**'அவுட் ஆ்ஃப் தி பாக்ஸ்' (out of the Box Thinking' ):**

- புதுமையான சிந்தனைகளை ஊக்குவிக்கும் வகையில், கணிதம் மூலம் 'அவுட் ஆ்ஃப் தி பாக்ஸ்' (out of the Box Thinking') என்ற பாடத் திட்டத்தை சென்னையில் உள்ள இந்திய தொழில் நுட்பக் கழகம் (ஐஐடி மெட்ராஸ்) அறிமுகப்படுத்த உள்ளது.
- 10 லட்சம் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ - மாணவிகள் பயன் பெறும் வகையில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இப்படியொரு முன் முயற்சி நாட்டிலேயே முதன் முறையாகும்.
- ஐஐடி மெட்ராஸ் ப்ரவர்த்தக் டெக்னாலஜிஸ் பவுண்டேஷன், ஐஐடி மெட்ராஸ் - ன் செக்.8 கம்பெனி (IITMadras Pravartak Technologies Foundation, sec 8 company of IIT Madras) மூலம் கட்டணமின்றி ஆன்லைனில் இந்தப் பாடத் திட்டம் கற்பிக்கப்படுவதுடன் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு கிரேடு சான்றிதழும் வழங்கப்படும்.
- அறிவியல், தொழில் நுட்பம், பொறியியல், கணிதம் (Science, Technology, Engineering and Mathematics - STEM) ஆகிய பாடங்கள் கிராமப்புற பள்ளி மாணவர்களைச் சென்றடையும் வகையில் கோடை காலப் பயிற்சி வகுப்பை சென்னையில் உள்ள இந்திய தொழில் நுட்பக் கழகம் (ஐஐடி மெட்ராஸ்) ஜூன் 20 ந் தேதி முதல் 25 ந் தேதி வரை நடத்தியது.

**'கலைஞர் எழுது கோல்' விருது:**

- முன்னாள் முதல்வர் கருணாநிதி பிறந்தநாளையொட்டி, தமிழ் நாடு அரசின், கலைஞர் நினைவு கலைத் துறை வித்தகர் விருது 2022, வசன கர்த்தா ஆரூர் தாஸ் அவர்களுக்கும், 'கலைஞர் எழுது கோல்' விருது மூத்த பத்திரிகையாளர் ஐ. சண்முக நாதனுக்கும் வழங்கப்பட்டுள்ளது.
- ஓய்வு பெற்ற நீதிபதி முருகேசன் தலைமையில் 13 பேர் கொண்ட மாநில கல்வி கொள்கை குழு அமைத்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.
- குஜராத்தில் 1.6.2022 அன்று தொடங்கிய அனைத்து மாநில கல்வி அமைச்சர்கள் மாநாட்டை தமிழக அரசு புறக்கணித்துள்ளது.

**2021- 2022 ம் நிதி ஆண்டில் தமிழ் நாட்டிற்கு கிடைத்த அந்நிய நேரடி முதலீடு 30% அதிகரித்துள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது:**

- கடந்த நிதியாண்டுக்கு முந்தைய நிதியாண்டு தமிழ்நாட்டிற்கு ரூ. 17,208 கோடி நேரடி அந்நிய முதலீடு கிடைத்தது. இந்த தொகை கடந்த நிதியாண்டில் ரூ. 22,396 கோடியாக உயர்ந்துள்ளது.
- இது முந்தைய நிதியாண்டை விட 30% அதிகமாகும். நடப்பு 2022 - 2023 ம் நிதியாண்டில் தமிழ் நாட்டிற்கு ரூ. 68,375 கோடி மதிப்பிலான 130 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் 2,05,000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.
- கடந்த நிதியாண்டில் அதிக நேரடி அந்நிய முதலீட்டை ஈர்த்த மாநிலங்களின் பட்டியலில் கர்நாடக மாநிலம் முதலிடத்தில் உள்ளது. 2 வது இடத்தில் மராட்டியமும் டெல்லி 3 வது இடத்திலும் உள்ளன.

**"எம்பிரஸ் சொகுசு சுற்றுலா கப்பல்" (Empress cruise):**

- தமிழ் நாடு அரசின் சுற்றுலாத் துறை, 'கார்டிலியா குருசஸ்' (Cordelia Cruises) நிறுவனதுடன் இணைந்து ஆழ்கடல் சுற்றுலாவை தொடங்கியுள்ளது.
- இதன் ஒரு பகுதியாக, சென்னை துறைமுகத்தில் இருந்து 'எம்பிரஸ்' சொகுசு கப்பலின் பயன்பாட்டை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 4.6.2022 அன்று தொடங்கி வைத்தார்.
- இந்தியாவில் கோவா, மும்பை போன்ற சில பெரு நகரங்களில் மட்டுமே சொகுசு சுற்றுலா கப்பல் பயணம்இருந்து வந்தது. இந்நிலையில் முக்கியமான கடற்கரையை தன்னகத்தே கொண்டுள்ள சென்னையிலும், இத்தகைய சுற்றுலா வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.
- எம்பிரஸ் சொகுசு கப்பல்: 700 அடி நீளமும், 11 அடுக்குகளையும் கொண்ட இந்த சொகுசு கப்பலில் 979 அறைகள் உள்ளது. ஒரே நேரத்தில் 1950 பயணிகள் மற்றும் 800 பணியாளர்கள் என 2750 பேர் வரை இந்த சொகுசு கப்பலில் பயணிக்கலாம் என்பது கூடுதல் சிறப்பு.

- ஒரே நேரத்தில் 1,000 பேர் அமர்ந்து நிகழ்ச்சிகளை ரசிக்கும் வகையிலான கலையரங்கம், 10 பெரிய ரெஸ்டாரண்டுகள், மதுக்கூடம், உடற்பயிற்சிக் கூடம், ஸ்பா, மசாஜ் செண்டர், யோகாசனம் செய்யும் இடம், நீச்சல் குளம், குழந்தைகளுக்கான விளையாட்டு பகுதி என பல்வேறு பொழுது போக்கு அம்சங்கள் இந்த சொகுசு கப்பலில் இடம் பெற்றிருப்பது சுற்றுலா பயணிகளை வெகுவாக கவர்ந்திருக்கிறது.

**மாநிலங்களுக்கு GST இழப்பீடு 186,912 கோடி: தமிழகத்துக்கு 19,602 கோடி:**

- மாநிலங்களுக்கு சரக்கு சேவை வரியின் (GST) இழப்பீட்டுத் தொகையாக ₹86,912 கோடி முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.
- மே.31 ஆம் தேதி வரையிலான இந்த இழப்பீட்டுத் தொகையில், தமிழகத்துக்கு ₹9,602 கோடி வழங்கப்பட்டுள்ளதாகவும் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் சார்பில் அத்துறை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- தற்போது மாநிலங்களுக்கு வழங்க வேண்டிய GST இழப்பீட்டுத் தொகை ₹25,000 கோடியாக உள்ளது.
- இருப்பினும் மாநிலங்களின் மூல தனச் செலவுகளை அதிகரிக்கும் நோக்கத்துடன் கூடுதல் வரி மூலம் மற்றும் சொந்த நிதி ஆதாரங்களிலிருந்தும் 161,912 கோடியையும் சேர்த்து விடுவிப்பதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.
- GST இழப்பீட்டு தொகை வழங்கப்படாதது குறித்து சர்ச்சை எழுப்பப்பட்டு வந்த நிலையில், மத்திய அரசு தற்போது நிலுவையின்றி அனைத்து தொகையையும் முழுமையாக விடுவித்துள்ளது.
- 2017 - ஆம் ஆண்டு ஜூலை முதல் GST அமலுக்கு வந்த போது, மாநிலங்களுக்கு ஏற்படும் வரி வருவாய் இழப்பீட்டை ஈடுகட்ட அடுத்த 5 ஆண்டுகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க சட்டம் கொண்டு வரப்பட்டது.
- இருப்பினும், இந்த வரி இழப்பீட்டை மாநிலங்களுக்கு கூடுதலாக வழங்க மத்திய அரசு மேலும் நிதி ஆதாரங்களுக்கு சில சரக்குகளில் கூடுதல் வரி (செஸ்) விதித்து மாநிலங்களின் வருவாயை மத்திய அரசு பாதுகாத்தது. இது கூட்டு வளர்ச்சி விகிதத்தில் வழங்கப்பட்டு வந்தது.

- கடந்த 2017-18, 2018-19 நிதியாண்டுகளில் குறிப்பிட்ட நேரத்தில் GST இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.
- இதற்கிடையே கரோனா நோய்த் தொற்றால் மத்திய அரசுக்குரிய கூடுதல் வரி அதிகரிக்கவில்லை என்பதுடன், கூடுதல் வரி வருவாயில் வீழ்ச்சியும் ஏற்பட்டது.
- இந்த வீழ்ச்சிக்கான இடைவெளியை நிரப்பவும், மாநில அரசுக்கு வழங்க வேண்டிய GST இழப்பீட்டுக்காக நிதி ஆதாரங்களின் இடைவெளியைப் போக்கவும் வெளிச் சந்தையில் மாநிலங்கள் கடன் பெற மத்திய அரசு அனுமதித்தது.
- பின்னர், அனைத்து மாநிலங்களும் ஒப்புக் கொண்ட நிலையில், கடந்த 2020 - 21 நிதியாண்டில் ₹1.1 லட்சம் கோடி, 2021 - 22 நிதியாண்டில் ரூ.1.59 லட்சம் கோடி என சந்தையில் கடனைப் பெற்றுக் கொள்ள மாநிலங்களுக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியது. இது தவிர வழக்கமான GST இழப்பீட்டு தொகையையும் மத்திய அரசு விடுவித்து வந்தது.
- ஆனால், நிகழாண்டில் GST வரி, கூடுதல் வரி வருவாய் படிப்படியாக அதிகரித்து வருகிறது. இதை முன்னிட்டு கடந்த நிதியாண்டிற்கும் நடப்பு நிதியாண்டிற்கும் வழங்க வேண்டிய இழப்பீட்டு தொகையின் நிலுவைத் தொகையை முழுமையாக உடனடியாக வழங்க மத்திய அரசு முன் வந்துள்ளது.
- இதன் படி சரக்கு சேவை வரியின் இழப்பீட்டை பெறும் 21 மாநிலங்களுக்கு கடந்த ஜனவரி 2022 வரையிலான தொகை ரூ. 47,617 கோடி; 2022, பிப்ரவரி-மார்ச் ஆகிய மாதங்களுக்கு ₹21,322 கோடி; இறுதியாக ஏப்ரல் - மே மாதங்களுக்கு ரூ. 17,973 கோடி என மே 31 - ஆம் தேதி வரை மொத்த நிலுவைத் தொகை ₹86, 912 கோடியாக கணக்கிடப்பட்டது.
- இந்தத் தொகை முழுமையாக இந்த மாநிலங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.
- இதில், மகாராஷ்டிர மாநிலத்தை (314,145 கோடி) அடுத்து தமிழகம் தான் அதிக அளவாக ₹9,602 கோடி பெற்றுள்ளது. மற்ற மாநிலங்களில் உத்தர பிரதேசம் ₹8,874 கோடி, கர்நாடகம் ₹8,633 கோடி, தில்லி ₹8,012 கோடி பெற்றுள்ளது.
- இதில் தமிழக அரசு தரப்பில் ரூ. 11,600 கோடி வரை எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், முன் கணக்கீட்டின் படி ரூ. 9,602 கோடி கிடைத்துள்ளது.
- இறுதிக் கணக்கீடுகளில் எதிர்பார்த்த தொகை முழுமையாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக தமிழக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

**சொற்குவையில் 7.64 இலட்சம் கலைச் சொற்கள் உருவாக்கம்: விரைவில் கட்டணமில்லா தொலைபேசி சேவை:**

- தமிழக அரசின் அகர முதலித் திட்ட இயக்ககத்தின் சார்பில் தொடங்கப்பட்ட சொற்குவை திட்டத்தின் கீழ் இதுவரை 7 லட்சத்து 64 ஆயிரத்து 824 கலைச் சொற்கள் உருவாக்கப்பட்டு இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.
- தமிழ்க் கலைச் சொல் தொடர்பான ஐயங்களைத் தீர்த்துக் கொள்ள 24 மணி நேரமும் செயல்படும் கட்டணமில்லா தொலைபேசி சேவை விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.
- 600 - க்கும் மேற்பட்ட துறைகள்: இன்றைய கல்விப் புலத்தில் உள்ள 600 - க்கும் மேற்பட்ட துறைகளில் புழங்கும் கலைச் சொற்கள் அனைத்தையும் திரட்டி அவற்றுக்கு நிகரான தமிழ்க் கலைச் சொற்களை வடிவமைத்து இணைய தளத்தின் பொது வெளியில் வெளியிடுவதும், இதுவரை தமிழில் வெளி வந்துள்ள அகராதிகளில் இடம் பெற்றுள்ள அனைத்துச் சொற்களையும் ஒன்று திரட்டி, நிரல்படுத்தி தமிழின் சொல் வளத்தை உலகறியச் செய்வதுமே சொற்குவைத் திட்டத்தின் முதன்மை நோக்கமாகும்.
- இந்தத் திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்ட "sorkuvai.com" என்ற இணைய தளத்தின் வாயிலாக தமிழ்க் கலைச் சொல் தொடர்பான ஐயங்களைத் தீர்த்துக் கொள்ள வழி வகை செய்யப்பட்டுள்ளது.
- விரைவில் தொடங்கப்படவுள்ள 24 மணி நேரமும் செயல்படும் கட்டணமில்லாத் தொலைபேசி வாயிலாகவும் தமிழ் க்கலைச் சொல் தொடர்பான ஐயங்களைத் தீர்த்துக் கொள்ளலாம்.

**தமிழகத்தில் 8,023 பேருக்கு 4 ஆவது நிலை யானைக்கால் நோய் பாதிப்பு:**

- தமிழ் நாட்டில் 8,023 பேருக்கு நான்காவது நிலை யானைக்கால் நோய் பாதிப்புக்கான சிகிச்சை பெற்று வருவதாக மருத்துவத்துறை அமைச்சர் மா சுப்பிமணியன் தெரிவித்துள்ளார்.
- இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் அமைச்சர் மா சுப்பிரமணியன் கூறியது: யானைக்கால் நோய் ஆரம்பத்தில் காய்ச்சல், நெரி கட்டுதல், கைக்கால் வலி, தோல் சிவந்து காணப்படுதல், தோல் தடித்து காணப்படுதல் போன்ற அறிகுறிகளுடன் இருக்கும். நோய் முற்றும் போது கால்களில் வீக்கம் (யானைக்கால்), விரைவீக்கம், கைகள் மற்றும் மார்பகங்களில் வீக்கம் போன்றவை ஏற்படும்.
- இந்தத் தாக்கங்களுக்கு ஏற்ப யானைக்கால் நோய் நான்கு நிலைகளில் அழைக்கப்பட்டு வருகிறது. யானைக்கால் நோயின் தாக்கம் தமிழகத்தில் 29 மாவட்டங்களில் காணப்பட்டது. யானைக்கால் நோய் ஒழிப்புத் திட்டம் 1957 - ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

- இத்திட்டத்தின்கீழ் 44 இரவு நேர இரத்தப் பரிசோதனை மையங்களும், 25 யானைக்கால் நோய் கட்டுப்பாட்டு மையங்களும் செயல்பட்டு வருகின்றன. இந்த மையங்கள் மூலம் ஆங்காங்கே பொது மக்களுக்கு இரவு நேர ரத்தத் தடவல் பரிசோதனை மற்றும் கொசு ஒழிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- யானைக்கால் நோயை ஒழிக்கும் பொருட்டு ஒட்டு மொத்த டிஇசி மாத்திரை வழங்கும் திட்டம் 1998 முதல் 2014 வரை 2 வயது முதல் 60 வயது வரை உள்ள அனைவருக்கும் வருடந்தோறும் மாத்திரைகள் வழங்கப்பட்டன. தமிழ்நாடு அரசின் மேற்கண்ட நடவடிக்கைகளால் இந்நோய் தற்பொழுது பரவக் கூடிய நிலையில் இல்லை என்ற இலக்கை நோக்கி தமிழ்நாடு செல்கிறது.
- தற்பொழுது யானைக்கால் நோய் முற்றிலும் ஒழிப்பு என்ற இலக்கினை நோக்கி சென்ற போதிலும், ஏற்கெனவே பல ஆண்டுகளுக்கு முன்பு யானைக்கால் நோய் நிலை 4 - இல் தமிழகத்தில் 8,023 நபர்கள் தற்போது பாதிப்பில் உள்ளனர். நிலை 4 - ல் உள்ளவர்களுக்கு கால் வீக்கம், தோலில் புண்கள் மற்றும் நீர் வடிதல் ஆகியவை காணப்படும்.
- இதனால் இவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதால் உதவித் தொகையாக மாதம் ரூபாய்.1000/- மற்றும் யானைக்கால் பராமரிப்பு உபகரணங்கள் 2010 - ம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் யானைக்கால் நோய் பாதித்தவர்களுக்கு மாதம் தோறும் ரூபாய் 1000 வங்கிக் கணக்கிலேயே மாவட்ட துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அலுவலகம் மூலமாக செலுத்தப்படுகிறது என்று தெரிவித்தார்.

**6 எழுத்தாளர்களுக்கு வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள்: ஒதுக்கீட்டு உத்தரவுகளை வழங்கினார் முதல்வர்:**

- ஆறு எழுத்தாளர்களுக்கு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளுக்கான உத்தரவுகளை முதல்வர் முக ஸ்டாலின் வழங்கினார். இது குறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழ்நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர்களில் ஞான பீடம், சாகித்திய அகாதெமி போன்ற தேசிய விருதுகள், மாநில இலக்கிய விருதுகள், புகழ் பெற்ற உலகளாவிய அமைப்புகளின் விருதுகளைப் பெற்ற எழுத்தாளர்களுக்கு அவர்கள் வசிக்கும் மாவட்டத்தில் அல்லது விரும்பும் மாவட்டத்தில் தமிழ் நாடு அரசு மூலமாக வீடு அளிக்கப்படும் என்ற திட்டத்தை கடந்த ஆண்டு ஜூன்.3 - ஆம் தேதி முதல்வர் மு க ஸ்டாலின் அறிவித்தார். இந்த அறிவிப்பைச் செயல்படுத்தும் வகையில், ஆறு எழுத்தாளர்களுக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

**எழுத்தாளர்கள்:**

- வணக்கம் வள்ளுவ எனும் கவிதை நூலுக்காக சாகித்திய அகாதெமி விருதையும், கலைஞர் மு கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதையும் எழுத்தாளர் ஈரோடு தமிழன்பன் பெற்றுள்ளார்.
- இதே போன்று, தமிழ் இலக்கியப் பணிகளுக்காக கலைஞர் மு கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதை முனைவர் இ சுந்தர மூர்த்தியும், 'அஞ்ஞாடி என்னும் நாவலுக்காக பூமணியும், 'செல்லாத பணம்' நாவலுக்காக இமையமும் சாகித்திய அகாதெமி விருதுகளைப் பெற்றுள்ளனர்.
- இந்த நான்கு எழுத்தாளர்களுக்கும் சென்னை கோயம்பேட்டில் உள்ள தெற்காசியக் கூட்டமைப்பு விளையாட்டு கிராமக் கோட்டத்தில் உயர் வருவாய்ப் பிரிவு அடுக்குமாடி குடியிருப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




- 'கையொப்பம்' என்னும் கவிதை நூலுக்காக சாகித்திய அகாதெமி விருது பெற்ற கவிஞர் புவியரசுக்கு, கோவை வீட்டு வசதி பிரிவு கணபதி திட்டப் பகுதியில் உயர் வருவாய்ப் பிரிவு குடியிருப்புகளில் அடுக்கு மாடி குடியிருப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- தமிழ் இலக்கியப் பணிகளுக்காக கலைஞர் மு கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது பெற்ற கு மோகன ராசுவுக்கு, சென்னை அண்ணா நகர் சாந்தி காலனி நடுவாங்கரை திட்டப் பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**1,000 மீனவ இளைஞர்களுக்கு உயிர் பாதுகாப்புப் பயிற்சி - முதல்வர் முக ஸ்டாலின் தொடக்கி வைத்தார்:**

- தமிழ் நாட்டில் 14 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,000 மீனவ இளைஞர்களுக்கு உயிர் பாதுகாப்பு மற்றும் மீட்புப் பயிற்சியளிக்கும் திட்டத்தை முதலமைச்சர் மு. க ஸ்டாலின் தொடக்கி வைத்தார். இந்தத் திட்டத்தில், முதற்கட்டமாக செங்கல்பட்டு மாவட்டம் கோவளத்தில் 25 மீனவ இளைஞர்கள் பங்கேற்றனர்.

- தமிழ்நாடு 1,076 கிமீ நீளமுள்ள கடற்கரையைக் கொண்டது. இங்குள்ள 608 மீனவ கிராமங்களில் 10.48 இலட்சம் மீனவர்கள் வாழ்கின்றனர். கடற்கரைப் பகுதிகளுக்கு மக்கள் செல்லும் போது அங்கு ஏற்படும் விபத்துகளால் மனித உயிர்களை இழக்க நேரிடுகிறது. இது போன்ற விபத்துகளைக் குறைக்கவும், நீரில் தவறி மூழ்கி தவிப்பவர்களைக் காப்பாற்றிடும் வகையிலும் மீனவ இளைஞர்களுக்கு, 'கடற்கரை உயிர் காக்கும் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.
- இந்தப் பயிற்சியானது தேசிய மீன் வள மேம்பாட்டு வாரியத்தின் நிதி உதவியுடன் ₹53 லட்சம் மதிப்பீட்டில் தனியார் நிறுவனம் மூலம் மாநிலத்தின் 14 மாவட்டங்களைச் சேர்ந்த 1,000 மீனவ இளைஞர்களுக்கு அளிக்கப்படுகிறது.

**மனிதக் கழிவுகளை அகற்றும் பணிக்கு, 'ஹோமோசெப்' ரோபோ தயார்: சென்னை ஐஐடி தகவல்:**

- மனிதக் கழிவுகளை கைகளால் அகற்றும் முறையை ஒழிக்கும் பொருட்டு, 'ஹோமோசெப்' என்ற ரோபோ சென்னை ஐஐடி ஆராய்ச்சியாளர்களால் உருவாக்கப்பட்டு தற்போது களப் பணிக்கு முழுமையாகத் தயார் நிலையில் உள்ளது.

**மாமல்லபுரத்தில் செஸ் ஒலிம்பியாட்: இலச்சினை, சின்னம் வெளியீடு**

- மாமல்லபுரத்தில் 44 ஆவது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டி ஜூலை.28 தொடங்கி ஆகஸ்ட்.10 வரை நடைபெற உள்ளது. இந்த நிலையில் செஸ் ஒலிம்பியாட் போட்டிக்கான இலச்சினை மற்றும் சின்னத்தைச் சென்னை ரிப்பன் மாளிகையில் முதலமைச்சர் மு. க ஸ்டாலின் வெளியிட்டார்.
- மேலும் செஸ் ஒலிம்பியாட் தொடருக்கான ஐம்பது நாட்கள் கவுன்ட் - டௌனையும் முதலமைச்சர் தொடங்கி வைத்தார். அதே போல், #ChessChennai2022 என்ற ஹாஷ் டாகையும் முதலமைச்சர் வெளியிட்டார். குதிரை வடிவிலான வெளியிடப்பட்ட சின்னத்துக்குத் 'தம்பி' என்று பெயரிடப்பட்டுள்ளது.

**தமிழ் நாட்டில் இரண்டாவது ஆண்டாக அதிகரித்த மகப்பேறு உயிரிழப்புகள்:**

- தமிழ் நாட்டில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக மகப்பேறு உயிரிழப்பு அதிகரித்துள்ளது.
- கர்ப்ப காலங்களிலும், பிரசவத்தின் போதும் கர்ப்பிணிகள் உயிரிழப்பு என்பது பரவலாக காணப்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த தேசிய சுகாதார இயக்கம் சார்பில் பல்வேறு தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

- தமிழகத்திலும் மகப்பேறு உயிரிழப்புகளைக் கட்டுப்படுத்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் கர்ப்பத்தைப் பதிவு செய்தது முதல் பிரசவம் வரை கர்ப்பிணிகள் சுகாதார செவிலியர்கள் மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றனர்.
- தவிர சிக்கலான பிரசவங்களுக்கு வாய்ப்புள்ளவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கென தனி வாட்ஸ் ஆப் குழு அமைத்து கண்காணிக்கப்படுவதாகவும் சுகாதாரத் துறையினர் தெரிவிக்கின்றனர்.
- ஒவ்வோர் ஆண்டும் முந்தைய ஆண்டைக் காட்டிலும் மகப்பேறு உயிரிழப்புகளைக் கட்டுப்படுத்த சுகாதாரத் துறையினர் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தேசிய சுகாதார இயக்கம் சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.
- நாடு முழுவதும் மகப்பேறு உயிரிழப்புகள் 1 லட்சத்துக்கு கணக்கிடப்பட்டு சராசரியில் குறிப்பிடப்படுகிறது. அதன் படியே மகப்பேறு உயிரிழப்புகளைக் கட்டுப்படுத்திய மாவட்டங்கள் வரிசைப்படுத்தப்படுகின்றன. இந்நிலையில் தமிழ் நாட்டில் முந்தைய ஆண்டைக் காட்டிலும் கடந்த ஆண்டு மகப்பேறு உயிரிழப்புகள் அதிகரித்துள்ளன.
- தமிழ் நாட்டில் கடந்த 2020 - 21 - ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் பேருக்கு சராசரியாக 73 பேர் உயிரிழந்துள்ளனர். ஆனால் கடந்த ஆண்டு (2021 - 22) ஒரு இலட்சம் கர்ப்பிணிகளில் சராசரியாக 90 பேர் உயிரிழந்துள்ளனர்.
- இதுவே கடந்த 2019-20 ஆம் ஆண்டில் ஒரு லட்சத்தில் 53 உயிரிழப்புகள் மட்டுமே பதிவாகியுள்ளன. கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து மகப்பேறு உயிரிழப்புகள் அதிகரித்துள்ளன. தமிழ்நாட்டில் கடந்த 2020-21 ஆம் ஆண்டில் 9 லட்சத்து 8 ஆயிரத்து 623 கர்ப்பிணிகள் குழந்தை பெற்றனர். அதேவேளை பிரசவத்தின்போதும், கர்ப்பகாலங்களிலும் 664 தாய்மார்கள் உயிரிழந்துள்ளனர். ஆனால், கடந்த 2021-22 ஆம் ஆண்டில் 9 லட்சத்து 12 ஆயிரத்து 436 பேர் குழந்தை பெற்றெடுத்த நிலையில், 827 மகப்பேறு உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.
- முந்தைய ஆண்டைக் காட்டிலும் கடந்த ஆண்டு 163 உயிரிழப்புகள் அதிகரித்துள்ளன. தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக மகப்பேறுகால உயிரிழப்பு அதிகரித்து வருவது கர்ப்பகால கண்காணிப்பில் தொய்வு ஏற்பட்டுள்ளதை வெளிக்காட்டுகிறது.

- **வளர்ந்த மாவட்டங்களைப் பின்னுக்குத் தள்ளிய தருமபுரி:** தமிழ் நாட்டில் சுகாதாரத் துறையின் வசதிக்காக 38 வருவாய்த் துறை மாவட்டங்கள் 46 சுகாதார மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு மாவட்ட அளவில் குறைந்த மகப்பேறு உயிரிழப்புகள் பதிவான சுகாதார மாவட்டங்களில் பழனி, பரமக்குடி, தருமபுரி, திருவாரூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்கள் முதல் 5 இடங்களில் உள்ளன. அதிக உயிரிழப்புகள் பதிவான மாவட்டங்களில் விருதுநகர், நாகப்பட்டினம், திருப்பூர், பெரம்பலூர், திருவள்ளூர் மாவட்டங்கள் கடைசி 5 இடங்களில் உள்ளன.
- சுகாதார மாவட்ட அளவில் பழனி முதலிடத்தில் இருந்தாலும் ஒட்டு மொத்தமாக வருவாய்த் துறை மாவட்டங்கள் அளவில் கணக்கிடும் போது தருமபுரி மாவட்டமே முதலிடத்தில் உள்ளது.
- மாநிலத்தில் மகப்பேறு உயிரிழப்புகளைக் கட்டுப்படுத்துவதில் சென்னை, மதுரை, கோவை, திருப்பூர் போன்ற வளர்ந்த மாவட்டங்களைப் பின்னுக்குத்தள்ளி தருமபுரி மாவட்டம் முதலிடம் பெற்றுள்ளது.
- முந்தைய ஆண்டு மகப்பேறு உயிரிழப்புகளைக் கட்டுப்படுத்துவதில் முதல் மூன்று இடங்களில் இருந்த புதுக்கோட்டை, தூத்துக்குடி, கோவை ஆகிய மாவட்டங்கள் தற்போது முறையே 27, 34 மற்றும் 6 - ஆவது இடத்தில் உள்ளன.

**தேசிய தடகளம்: தமிழ் நாடு ஒட்டு மொத்த சாம்பியன்**

- சென்னையில் நடைபெற்ற 61 - ஆவது தேசிய தடகளப் போட்டியில் தமிழ் நாடு ஒட்டு மொத்த சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. ஹரியானா, உத்தர பிரதேசம் முறையே அடுத்த இரு இடங்களைப் பிடித்தன.
- மும்முறை தாண்டுதல்: சென்னை ஜவாஹர்லால் நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதி நாளான செவ்வாய்க்கிழமை ஆடவர் மும்முறை தாண்டுதலில் தமிழ் நாட்டு வீரர் பிரவீன் சித்ரவேல் 17.18 மீ தூரம் தாண்டி புதிய போட்டி சாதனையுடன் ஒரேகான் உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டிக்கும் தகுதி பெற்றார். கேரளத்தின் அப்துல்லா 17.14 மீ, எல்டோஸ் பால் 16.81 மீ தூரம் தாண்டி வெள்ளி, வெண்கலம் வென்றனர்.

- 200 மீ ஓட்டம்: மகளிர் பிரிவில் தமிழ் நாட்டு வீராங்கனை தனலட்சுமி 23.27 விநாடிகளில் பந்தய தூரத்தைக் கடந்து தங்கம் வென்றார். 100 மீ ஓட்டத்தில் தங்கம் வென்ற ஹிமாதாஸை பின்னுக்கு தள்ளினார் தனலட்சுமி. அஸ்ஸாமின் ஹிமாதாஸ் 23.29 விநாடிகளிலும், மகாராஷ்டிரத்தின் ஐஸ்வர்யா கைலாஷ் 23.72 விநாடிகளிலும் வந்து முறையே அடுத்த இரு இடங்களைப் பிடித்தனர். ஆடவர் பிரிவில் அஸ்ஸாம் வீரர் அமலன் போரோகைன் 21.00 விநாடிகளில் இலக்கை அடைந்து தங்கம் வென்றார். இவர் 100 மீ ஓட்டத்திலும் தங்கம் வென்றிருந்தார். கர்நாடகத்தின் அபின் தேவதிகா, மகாராஷ்டிரத்தின் இராகுல் இரமேஷ் முறையே வெள்ளி, வெண்கலம் வென்றனர்.
- 400 மீ தடை தாண்டுதல்: மகளிர் பிரிவில் தமிழ் நாட்டின் வித்யா இராம்ராஜ் 57.08 விநாடிகளில் பந்தய தூரத்தைக் கடந்து தங்கம் வென்றார். கேரளத்தின் அனு (58.99), ஆரத்தி (59.26) வெள்ளி, வெண்கலம் வென்றனர். ஆடவர் பிரிவில் கேரளத்தின் ஜபீர் பள்ளியாலில் 49.76 விநாடிகளில் இலக்கை அடைந்து முதலிடம் பிடித்தார். தமிழகத்தின் சந்தோஷ்குமார் (50.16), குஜராத்தின் தவால் மகேஷ் (50.55) வெள்ளி, வெண்கலம் வென்றனர்.
- 5000 மீ ஓட்டம்: மகளிர் பிரிவில் மகாராஷ்டிரத்தின் சஞ்சீவனி பாபுராவ் 16:11.46 நிமிஷத்தில் பந்தய தூரத்தைக் கடந்து தங்கம் வென்றார். ஷரதா ரஜினி (குஜராத்), சீமா (ஹிமாச்சலம்) முறையே வெள்ளி, வெண்கலம் வென்றனர். ஆடவர் பிரிவில் தில்லியின் ஹரேந்திர குமார் 14.01:50 நிமிஷத்தில் இலக்கை அடைந்து முதலிடம் பிடித்தார். இராஜஸ்தானின் அமித் ஜாங்கிர் வெள்ளியும், தர்மேந்தர் வெண்கலமும் பெற்றனர்.
- சுத்தியெறிதல்: ஆடவர் பிரிவில் இராஜஸ்தானின் நீரஜ் குமார் 65.52 மீ தூரம் எறிந்து தங்கம் வென்றார். உத்தர பிரதேசத்தின் ஹர்வேந்திர சிங், பஞ்சாபின் தம்நீத் சிங் அடுத்த இரு இடங்களைப் பிடித்தனர். மகளிர் பிரிவில் இராஜஸ்தானின் மஞ்சு பாலா (64.19 மீ), உத்தர பிரதேசத்தின் சரிதா சிங் (62.20 மீ), ஹரியானாவின் ரேணு (59.83 மீ) முறையே தங்கம், வெள்ளி, வெண்கலம் வென்றனர்.



- 4 - 400 மீ தொடரோட்டம்: மகளிர் பிரிவில் சுமி, படேரி, நிஷா, சிம்மி ஆகியோர் கொண்ட ஹரியானா அணி முதலிடமும் (3:41.90 நிமிஷம்), சுமதி, ஒலிம்பா, ரோஷினி, சுபா ஆகியோர் அடங்கிய தமிழ் நாட்டு அணி 2 ஆம் இடமும் (3:42.39), ஜஸ்மிலா, சயானா, லிங்கெட், ஆரத்தி ஆகியோர் கொண்ட கேரள அணி 3 ஆமிடமும் (3:42.92) பிடித்தன. ஆடவர் பிரிவில் முகமது அஜ்மல், நாக நாதன் பாண்டி, மிஜோ சாக்கோ, ஆரோக்கிய ராஜிவ் அடங்கிய இந்தியா ஏ அணி, அருணா, தேஷன், லக்ஷன், நிகி அடங்கிய இலங்கை ஜே அணி, சித்தாப்பா, அபின், லக்ஷ்மண், நிஹால் அடங்கிய கர்நாடக அணி முறையே தங்கம், வெள்ளி, வெண்கலம் வென்றன.
- நீளம் தாண்டுதல்: மகளிர் பிரிவில் கர்நாடகத்தின் ஐஸ்வர்யா 6.60 மீ தூரம் குதித்து தங்கம் வென்றார். கேரளத்தின் ஆன்சி சோஜன் 6.49 மீ, ஸ்ருதி லட்சுமி 6.35 மீ தூரம் குதித்து வெள்ளி, வெண்கலம் வென்றனர்.




**தமிழ் நாட்டில் புதிதாக 20 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்: முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்:**

- காவல் துறை சார்பில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், அனைத்து உட்கோட்டங்களிலும் ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையம் என்ற வகையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 20 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை தமிழ் நாட்டு முதல்வர் மு. க ஸ்டாலின் திறந்து வைத்தார்.
- கடந்த 1973 - ஆம் ஆண்டு தமிழ் நாடு காவல் துறையில் முதன் முதலில் மகளிர் காவல் பணியில் நியமிக்கப்பட்டனர். சட்டம் - ஒழுங்கைப் பராமரித்தல், குற்றங்களைத் தடுத்தல் மற்றும் கண்டறிதல், போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல் உள்ளிட்ட பல்வேறு முக்கிய பணிகளில் மகளிர் காவல் துறையினர் திறம்பட செயலாற்றி வருகின்றனர். தற்போது மாநிலத்தில் 202 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் செயல்படுகின்றன.
- புதிதாக திறக்கப்பட்ட மகளிர் காவல் நிலையங்கள்:
- சென்னை பெருநகர காவல் ஆணையரகத்திற்குட்பட்ட வளசரவாக்கம்.

- தாம்பரம் மாநகரம் - சேலையூர், ஆவடி மாநகரம் - எஸ்ஆர்எம்சி.
- தாம்பரம் மாநகரம் - வண்டலூர்.
- வேலூர் மாவட்டம் - காட்பாடி;
- திருவண்ணாமலை மாவட்டம் - திருவண்ணாமலை ஊரகம்.
- கடலூர் மாவட்டம் - திட்டக்குடி;
- கரூர் மாவட்டம் - கரூர் ஊரகம்;
- புதுக்கோட்டை மாவட்டம் - கோட்டைப்பட்டினம்.
- தஞ்சாவூர் மாவட்டம் - ஒரத்தநாடு;
- திருவாரூர் மாவட்டம் - முத்துப்பேட்டை.
- கோயம்புத்தூர் மாவட்டம் - மேட்டுப்பாளையம்; ஈரோடு மாவட்டம் - பெருந்துறை.
- கிருஷ்ணகிரி மாவட்டம் - ஊத்தங்கரை;
- மதுரை மாவட்டம் - ஊமச்சிக்குளம்;
- திண்டுக்கல் மாவட்டம் - திண்டுக்கல் ஊரகம்;
- தேனி மாவட்டம் - பெரியகுளம்;
- இராமநாதபுரம் மாவட்டம் - முதுகுளத்தூர்;
- திருநெல்வேலி மாவட்டம் - சேரன்மாதேவி;
- தென்காசி மாவட்டம் - புளியங்குடி.

**1969 - க்கு பிந்தைய பிறப்பு - இறப்புகள்: இணையப் பதிவேற்றம் தொடக்கம்:**

- தமிழ்நாடு முழுவதும் 1969ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரையிலான பிறப்பு, இறப்பு சான்றிதழ்களை இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யும் பணி தொடங்கப்பட்டுள்ளன.
- பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறையின் நூற்றாண்டு விழா, பன்னாட்டு பொதுச் சுகாதார மாநாட்டுக்கான இலச்சினை வெளியீட்டு நிகழ்வு சென்னையில் நடைபெற்றது.
- இதுகுறித்து வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:
- பிறப்பு, இறப்பு பதிவேடுகளை ₹75 இலட்சம் செலவில் இணையப் பதிவேற்றமாக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.
- 1969 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை நிகழ்ந்த பிறப்பு, இறப்பு பதிவேடுகள் CSR இணைய தளத்தில் பதிவேற்றப்படுகின்றன.
- தமிழகத்திலுள்ள 38 மாவட்டங்களில் வருவாய்த் துறை, நகராட்சி, மாநகராட்சி, பேரூராட்சி மற்றும் சுகாதாரத் துறை சார்ந்த பிறப்பு, இறப்பு பதிவாளர்களால் 16,348 பதிவு மையங்களில் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- பணிகள் நிறைவடைந்த பிறகு பொது மக்கள் எவ்வித இன்னல்களுமின்றி பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களை இணையதளம் மூலம் பதிவிறக்கஞ் செய்யலாம்.
- சர்வதேச பொதுச் சுகாதாரத் துறை மாநாடு: தமிழகத்தில் பொதுச் சுகாதாரத் துறை 1922 -ஆம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கர்னல் எஸ் டி இரஸ்ஸல் என்பவரை இயக்குநராகக் கொண்டு தொடங்கப்பட்டது.

- 2022 - ஆம் ஆண்டில் நூறு ஆண்டுகள் நிறைவு பெற்ற இந்தத் தருணத்தில் தமிழக பொதுச் சுகாதாரத்துறை தொன்மையைப் போற்றும் வகையில் இந்தியாவிலேயே முதல் முறையாக வரும் டிசம்பர் மாதத்தில் 3 நாள்கள் சர்வதேச பொதுச் சுகாதாரத்துறை
- மாநாடு சென்னையில் நடத்தப்படவுள்ளது.

















DAILY CURRENT
AFFAIRS IN TAMIL
for TNPSC Group 1, TNPSC Group 2/2A,
TNPSC Group 4, TNUSRB, TNFUSRC,
IBPS, SSC, IBPS RRB, SBI, RRB, UPSC etc.


BEST ARTICLES IN TAMIL
FOR EXAM PREPARATION
for TNPSC Group 1, TNPSC Group 2/2A,
TNPSC Group 4, TNUSRB, TNFUSRC,
IBPS, SSC, IBPS RRB, SBI, RRB etc.
ARTICLE


DOWNLOAD
Admit Card


ARTICLES
IN TAMIL